Registered as a Newspaper பக்கங்கள் 12 விலை ரூபா 6-00

Nallur Branch Library

ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 3ப (13-5-94) வெள்ளிக்கிழமை ஓசை 81

## பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசாங்க துறையிலும் தனியார் துறையிலும் வேலைவாய்ப்பு வழங்குவதற்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் மாகாண ரீதியாக நடைபெறுமென்று கொள்கை திட்டமிடல் அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். வேலைவாய்ப்புக் கோரி பதினாயிரம் பட்டதாரிகள் கொள்கைதிட்டமிடல் அமைச்சுக்கு விண்ணப்பங்களை அனுப்பியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (11ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகளை அனுப்புவதற்கு எதிராக லண்டனில் மாநாடு

## ஒத்துழைக்க வேண்டாமென யு. என். எச். சி ஆரிடம் கோரிக்கை

(லண்டன்)

**உலகின் பல நாடுகளில் பரந்து வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு எதிராக லண்டனில் நேற்றுமுன்தினம் மாநாடொன்று நடைபெற்றது. இம்மாநாட்டில் அகதிகளைத் திருப்பி அனுப்பும் நாடுகளுக்கு உதவ வேண்டாம் என அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உயர் ஸ்தானிகராலயத்திடம் வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.**

இம் மாநாட்டை மனித உரிமைகளுக்கான கூட்டணி அமைப்பு ஒழுங்கு செய்திருந்தது

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து நேற்று முன்தினம் இரவு லண்டன் பாராளுமன்றத்தில் கமிட்டி அறை ஒன்றில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் ஆராயப்பட்டது. இந்தக் கூட்டத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மனித உரிமைகள் காப்புக் குழுக்கள் மற்றும் பிரிட்டனில் நாடு கடந்த நிலையில் வாழும் தமிழர் அமைப்புக்கள் கலந்து கொண்டன.

இலங்கையில் மனித உரிமைகளுக்கான கூட்டணி அமைப்பினால் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (11 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத ஆயுதங்களை உடன் கைப்பற்றப் பணிப்பு

(கொழும்பு)

சட்டபூர்வமற்ற ஆயுதங்கள் மற்றும் சென்ற வன்முறை காலங்களில் வழங்கப்பட்டு மீள ஒப்படைக்கப்படாத சகல ஆயுதங்களையும் உடனடியாக மீளப்பெற்றுக் கொள்ளுமாறு சகல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கும் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் பணிப்பின் பேரில் பொலிஸ்மா அதிபரினால் வழங்கப்பட்ட மேற்படி உத்தரவில் உடனடியாக இவற்றை மீளப்பெற்றுக்கொள்ளுமாறும், ஆயுதங்களை மீள வழங்க மறுப்பு தெரிவிக்கும் சகலருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளு (11ஆம் பக்கம் பார்க்க)

## சொத்தி உபாலி பொலிசாரால் கைது

(கொழும்பு)

பாதாள உலகின் தலைவன் சொத்தி உபாலி நேற்று கண்டிகட்டுகஸ்தோட்டையில் வைத்து கொழும்பில் இருந்து சென்ற பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய விசேட பொலிஸ் கோஷ்டியினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் விசேட பணிப்பின் பேரில் இவர் உடனடியாக கைது செய்யப்பட்டதாகவும் இவருடன் மொட்டை சோம என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

இவரிடம் பொலிசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாகவும் இவருக்கு பின்னணியாகச் செயற்பட்ட ஐ. தே-கவைசேர்ந்த பல அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப் (11ஆம் பக்கம் பார்க்க)

## திரும்பும் அகதிகளுக்கு கொழும்பு பாதுகாப்பில்லை

### சர்வதேச மன்னிப்புச்சபை இணைப்பாளர்

(கொழும்பு)

அகதிகள் இலங்கைக்குத் திரும்பிய உடனேயே பயங்கரவாத நடவடிக்கைக்காக சந்தேகத்துக்கு உள்ளாவார்கள் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் பீற்றர் நீக்கள்ஸ் கூறினார்.

விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பெருந்தொகையான தமிழர் கொழும்பில் தொடர்ந்து கைது செய்யப்படுகின்றனர். கொழும்பை அண்டிய பகுதிகளிலும் இந் (11ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் சிப்பாய் பலி

(கொழும்பு)

முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று ஏற்பட்ட மோதலில் ஒரு சிப்பாய் பலியானதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து ஒரு மைல் தூரத்தில் இம் மோதல் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## 13 கைக் கூலிகளும் பொலிசாரால் கைது

(கொழும்பு)

அரசியல் வாதிகளின் கைக் கூலிகளாக இருந்து பல கொலைகளில் ஈடுபட்டுவந்த 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் பலர் தேடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விசேட பொலிஸ் கோஷ்டியினர் கடந்த மூன்று தினங்களாக கொழும்பு நகரின் பல இடங்களில் தேடுதல் நடாத்தி சொத்தி உபாலி கோஷ்டியை சேர்ந்த எட்டுப் பேரையும் சித்திக் கோஷ்டியை சேர்ந்த ஆறு பேரையும் கைது செய்துள்ளார்கள்.

இவர்களிடமிருந்து 3 கால்கஸ்ரோ துப்பாக்கிகளையும், (11ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் -இராணுவம் மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் பாவக்குடிச்சேனையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும இடையில் நேற்று மோதல்கள் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது

## கல்குடாவில்குண்டுவெடிப்பு பொலிசார் தீவிர சோதனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கல்குடாவில் கடந்த சனிக்கிழமை இரவு குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது-

கல்குடா பொலிஸ் நிலையத்தில் இருந்து சுமார் ஒன்றரை மைல் தொலைவில் இரவு 10 00 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது இச்சம்பவத்தில் அடுத்தடுத்து மூன்று குண்டுகள் வெடித்ததாகத் தெரியவருகின்றது-

இதனை அடுத்து அடுத்த நாள் காலை அப்பகுதியில் சிறிலங்கா பொலிசார் தீவிர சோதனை நடத்தியதாகவும் வாகனங்கள் சோதனையிடப் (11ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை கூட்டத்தில் டி. வி - கூரே வாக்குவாதம்

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவிற்கும் முன்னாள் ஐ. தே. க பொதுச்செயலாளரும் அமைச்சருமான சிறிசேன கூரேக்கும் இடையே நேரடியான கருத்து மோதல் இடம் பெற்றதாகவும் சுமார் ஒருமணி நேரத்திற்கும் அதிகமான நேரம் இம் மோதல் நடைபெற்றதாகவும் நம்பதகுந்த வட்டாரங்களைமேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

நேற்று நண்பகல் ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே மேற்படி முரண்பாடு தோன்றியதாகவும் இதனைத் தொடர்ந்து ஏனைய நடவடிக்கைகள் யாவும் ஒத்திவைக்கப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன

மேற்படி அமைச்சரவை மகாநாட்டின் பின்னர் 'சிறிசேன கூரேக்கு வழங்கிய பாதுகாப்பு அரைவாசியாகக் குறை (11ஆம் பக்கம பார்க்க)

## மனிதனும் வரலாறும்

பிரம்மஞானி எழுதும் மனிதனும் வரலாறும் என்ற தொடர் கட்டுரையின் 4-ம் பகுதி அடுத்த வாரம் வெளிவரும்.

# ஐ. தே. கவிற்கு சொத்தி உபாலி ஆற்றிய சேவையை மறக்கக்கூடாது

## ஜனாதிபதிக்கு கூரே தெரிவிப்பு

(கொழும்பு)

வன்முறைகள் மலிந்த சூழ்நிலையில் ஜனாதிபதி தேர்தலுக்காக ஐ-தே-க- சுவரொட்டிகளை நாடுமுழுவதும் ஒட்டியவர் உபாலியே என்பதனை ஜனாதிபதி டி- பி- விஜேதுங்கா புரிந்து கொள்ள வேண்டும் என அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்துள்ளார்.

சொத்தி உபாலி கைது செய்யப்பட்டது தொடர்பாக பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். பத்திரிகை நிருபர் அப்போது சொத்தி உபாலியின் வன்முறைக்கும் உங்களுக்கும் தொடர்பு உண்டா? என கேட்ட போது ''நான் ஒரு போதும் வன்முறைகளை நாடுவது இல்லை. சொத்தி உபாலி ஐ. தே கவில் ஒரு அங்கத்தவர். கட்சிக் கிளைக் கமிட்டியில் ஒரு முக்கியஸ்தர் மட்டுமே'' என தெரிவித்துள்ளார்.

சகல கட்சிகளிலும் நல்லவனும் கெட்டவனும் இருப்பது இயற்கையே. சட்டத்தின் முன் அவர் ஒரு சாதாரண பிரஜை என்பதை யாவரும் உணரவேண்டும் எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

கடந்த மாதம் மொகமட் நௌசாத், லோறா மாட்டீனஸ் இல (600534130 V 65122087 V) ஆகிய இருவருடைய அடையாள அட்டைகள் கைதடிக்கும் - நாவற்குழிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8261)

### பாமபோஷா

குடும்பத்திலுள்ள சகலருக்கும் ஏற்ற தரமானசத்துணவு பாம்போஷா. ப.அ. சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனையாகின்றது. (சி/9332)

### தவறிவிட்டது

09 05 94 அன்று திருநெல்வேலிச் சந்தைக்குள் கவருடன் ( Envelope ) இரண்டு காணி உறுதிகள் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திருநெல்வேலிச் சந்தைப் பொறுப்பாளரிடம் ஒப்படைக்குமாறு தயவாக வேண்டுகின்றேன். சன்மானம் வழங்கப்படும. (8259)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து கீழே குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் 1994.06 06 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதவி: காவற்பொறுப்பாளர் சக பழுதுபார்ப்பவர் (சங்கீதக் கருவிகள்)

சம்பள அளவுத்திட்டம்:
ரூபா 2745 - 10×55; 7×65 - 3750/- மாதமொன்றுக்கு
(இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளுடன், 1994. 12. 31 வரை அடிப்படைச் சம்பளத்தின் 25 சதவீதத்திற்குச் சமமான தொகையும் வழங்கப்படும்)

தகைமைகள்: (அ) இரண்டு தடவைகளிற்குமேற்படாது க. பொ. த (சா த.) தேர்வில் 6 பாடங்களில் சித்தி அல்லது எட்டாம் வகுப்பில் சித்தியடைந்து மானிய ஆணைக்குழுவில் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றில் 5 ஆண்டுகள் நிரந்தர சேவையைத்திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளவர்.

(ஆ) வீண்ணப்பதாரி வயலின். சித்தார், எஸ்ராஜ் ஆகியவற்றைப் பழுதுபார்த்தலிலும், நரம்புகளைப் பொருத்துவதிலும் தபேலா மிருதங்கம் என்பவற்றில் சிமெந்திடல், அவற்றில் பதனிட்ட தோலைப் பொருத்துதல், ஆர்மோனியத்தையும் இதர உள்நாட்டு சங்கீதக் கருவிகளையும் பழுதுபார்த்தல் என்பவற்றில் ஆற்றல் உடையவராகவும் உயர்கல்வி நிறுவனமொன்றில் அல்லது அரசாங்கத் திணைக்களமொன்றில் குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் அனுபவமுடையராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) வழங்கல் பதிவேடுகளைப் பேணுவதிலும், சங்கீதக் கருவிகளைப் பேணிக்காப்பதிலும் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு: அடிப்படைச் சங்கீத அறிவுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

தேர்வு: செய்முறைப்பரீட்சையின் மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்,

வயது: விண்ணப்ப முடிவு திகதியில் 40 வயதிற்கு மேற்படலாகாது.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் நியதி சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும். (இவ்விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கட்டுப்பாடாகஅமையாது) 70வயதிற்கு உட்பட்டவர்கள் யின் அரசாங்க சேவையிலிருந்து ஒய்வுபெற்றவர்களும் இப்பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பிக்கலாம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும் தபால்மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில்பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 23X10 சமீ அளவுடைய, சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும் விதிக்கப்பெற்ற படிவங்களில் தடித்த எழுத்தில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்,

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி
1994-05-04

(சி-9391)


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றேட்

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L பிரிவு 5 (8.30 - 2 00)

ஆரம்பம்: 16-5-1994 காலை 8.30

- தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவை
- இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டுமே ஆரம்பிக்கப்படும்.
- அனுமதிகளை உடன் பெற்றுக் கொள்ளவும்.

(சி-9402)




பின்வரும் அளவுகளில் எங்கும் விற்பனையாகிறது

140 கிராம் 35/- 500 கிராம் 100/-

தோடம்பழச் சுவையுடன் கூடிய

ஃப்ரூட்டி மிக்சை

(சி 9406) கேட்டு வாங்கி பருகி மகிழ்வீர்.


## நினைவு கூருகின்றோம்..
## 13.05.1994

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமினுள் கொண்டு செல்கையில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**அமல் / பணக்காரன்** (மிக்கேல்பிள்ளை அமலதாஸ் - குருநகர் - யாழ்)

1988ஆம் ஆண்டு விழுப்புண்ணடைந்த நிலையில் யாழ் - மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய,

**சுமன்** (திருமலை)

மட்டு - நாசிவன்தீவில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட,

**சாபீர்** (சரிபுதீன் முகமட்சாபீர் - தியாவெட்டவான் - மட்டு)

யாழ் - வெற்றிலைக்கேணியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் சுரேந்திரன்** (செல்வவினாயகம் ஞானசேகரன் - நெடியகாடு - வல்வெட்டித்துறை)

1989ஆம் ஆண்டு யாழ் - சுன்னாகத்தில் தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட,

**ஃ முத்துக்குமாரு** (கோபாலகிருஷ்ணன்- உடுவில் கிழக்கு - யாழ்)

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களின்போது படுகொலை செய்யப்பட்ட 09 தமிழர்கள் மற்றும் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்ட நெடுங்கேணி மகாவித்தியாலய மாணவன்

1990ஆம் ஆண்டு யாழ் - வைத்தியசாலையில் மூளைக் காய்ச்சல் நோயின் காரணமாக எமைப் பிரிந்த,

**உஷா** (பசுபதி பாலச்சந்திரன் - நாரந்தனை, ஊர்காவற்றுறை - யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

ஃ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9394)


## முகாவில் - ஆற்றங்கரை திரியாய் அம்மன்
## பொங்கல் விழா

20-05-1994 வெள்ளிக்கிழமை காலை விழா ஆரம்பமாகி பகல் தாகசாந்தியும் மாலை 4 மணிக்கு அபிஷேகமும் அன்னதானமும் இரவு பொங்கலும் தமிழ் மக்கள் நலம் வேண்டி பூசையும வெகு சிறப்பாக நடைபெறும்,

திரியாய் அம்மன்
பரிபாலன சபை

(8262)


## 3 ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு: 02 - 02 - 74

வீரச்சாவு: 12 - 05 - 91

### வீரவேங்கை நிக்சன்
### (இராசரத்தினம் சுதாகரன்)

ஈழம் மீட்க எழுந்த புயலே! - புலியே
வீறு கொண்ட வேங்கையே! புயலென
வீசி நின்ற நிக்சன் எனும் வீரனே
மூன்று ஆண்டுகள் சென்றாலும் உம்மை
நாம் என்றும் மறவோம்- தமிழீழ தாயின்
விலங் கொடிக்க வீறுகொண்டெழுந்த வீரனே
தமிழர் துயர் துடைக்க தம்பி வழி சென்று
தளராது களத்தில் நின்று எம்மண்மீட்பிற்காய்
தம்முயிரை அர்ப்பணித்த மாவீரனே- நிக்சன்
உம் முழக்கங்கள் எம்மை வழிப்படுத்த...
உம் பாசறை நோக்கி எம் பாதங்கள்
நடைபயில்கின்றன...

இப்போரில் இவருடன் வீரச்சாவை அணைத்துக் கொண்ட மாவீரர்களுக்கும் எமது வீர அஞ்சலியைச் செலுத்திக் கொள்கின்றோம்.

வைரவர் கோயிலடி
பரந்தன் கிளிநொச்சி

-குடும்பத்தினர்
(சி - 9398)

Nallur Branch Library

# கல்வி நிலையில் வீழ்ச்சியா?

> எமது போர்ச்சூழலையும், பொருளாதாரத் தடையையும் சிங்களப் பகுதிகளின் கல்வி அபிவிருத்தியினையும், வசதிகளையும் கவனத்தில் எடுத்து ஆராயும் பொழுது, எவ்வளவோ வசதியீனங்களுக்கு மத்தியிலும் எமது பரீட்சைப் பெறுபேறுகள் அதிகம் வீழ்ச்சி அடையவில்லை என்றே கூறலாம் எமது ஆசிரியர்களின் முயற்சி, ஊக்கம், கடமை உணர்ச்சி என்பன பாராட்டுக்குரியன.

அ. பஞ்சலிங்கம் (அதிபர்)
(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

கல்வித்துறை சம்பந்தமாகத்தான் எவரும் துணிந்து கருத்துத்தெரிவிக்கலாமென்ற நிலையுள்ளது. கற்பித்தல் அனுபவம், பாடசாலை நிர்வாக அனுபவம் இல்லாதவர்கள் தாங்கள் கற்றகால அனுபவத்தை மட்டும் அல்லது ஏடுகளில் கற்றவற்றை பெரும்பாலும் எமது சூழலுக்குப் பொருத்தமற்றவற்றை, வைத்துப் பாடசாலைக் கல்வியைப் பற்றி மேடைகளில் முழங்குகின்றார்கள். பாடசாலைக் கற்பித்தலில் ஈடுபாடுடைய ஆசிரியர்கள், அதிபர்கள் மௌனம் சாதிப்பதும், அவர்களின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமையும் இவற்றிற்கு காரணங்களாகும். மேலும் பரீட்சையில் குறைந்த புள்ளிகளை ஒரு மாணவன் பெற்றால் அதற்கு உடனடியாக ஆசிரியர் மேல் பழியைச் சுமத்துகின்றார்கள். இக் குறைவுக்கு பல காரணிகள் உண்டு என்பதனை உணர்ந்தும் அக் காரணிகள் ஆசிரியருக்கு அப்பாற்பட்டவை எனத் தெரிந்தும் இவ்வாறு விமர்சிக்கின்றனர்.

கல்வியின் நோக்கமென்ன? அந்நோக்கம் எந்தளவிற்கு நிறைவேற்றப்பட்டுள்ளது? அதற்கு அளவுகோல் உண்டா? பூரணத்துவமான கல்வி புகட்டப்பட்டுள்ளதா? கல்வியை மதிப்பிடுபவர்கள் இவற்றைப் பற்றிச் சிந்திப்பதேயில்லை. கல்விநிலை வீழ்ச்சி என்று கூறுபவர்கள் பரீட்சைப் பெறுபேறுகளை மட்டும் அளவுகோலாக எடுத்து விமர்சிக்கின்றனர். எந்த அளவிற்கு இது பொருத்தமென நாமும் சிந்தித்தல் நன்று. இருந்தபோதும் நாமும் அதே அளவுகோலை எடுத்து எமது மாவட்டத்தில் கல்வியின் நிலையை ஆய்வோம்

எமது மாவட்டத்தில் போர்ச்சூழல் நிலவுகின்ற கல்விக் கோட்டங்களிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். மக்கள் முற்றாகவும் இடம்பெயர்ந்துள்ளனர். இடம் பெயர்ந்த மக்கள் பலரும் உடைமைகளை, தொழில்களை இழந்துள்ளனர் இவ்வாறு இடம் பெயர்ந்த மக்கள் அகதி முகாம்களிலும் உறவினர் நண்பர் வீடுகளிலும் வாடகை வீடுகளிலுமாக வாழ்கின்றனர் இவர்களுள் இடம்பெயர்ந்த ஆசிரியர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது அகதிமுகாம்களில் கல்வி கற்கும் சூழலில்லை ஒரு குடும்பம் வாழ வேண்டிய வீட்டில் பல குடும்பங்கள் குடியேறியுள்ளன இதனால் கற்றல் நிகழ்வுச் சூழல் பாதிக்கப்படுகின்றது விலைவாசி ஏற்றம், பொருளாதார நெருக்கடி என்பனவும் குடும்பங்களை வாட்டுகின்றன மக்கள் சத்துள்ள உணவினைப் பெறமுடியாது தவிக்கின்றனர் சத்துள்ள உணவு வேண்டாம் இரு வேளைதன்னும் வயிற்றினை நிரப்புவதற்கு ஏதவது உணவு கிடையாதா? என்ற ஏக்கம் இரவில் போதியநேரம் கற்பதற்கு விளக்கிற்கு எரிபொருள் வாங்க எத்தனை குடும்பங்களால் முடிகிறது? குடும்பங்கள்தான் இப்படியென்றால் இடம்பெயர்ந்த பாடசாலைகளின் நிலையும் இதேபோன்றதுதான். போதிய இடவசதியின்மை, பாதிப்புற்ற ஆசிரியர்கள், மாணவர்கள் தம்வளங்கள் அனைத்தையும் இழந்தநிலை. வசதியுள்ள பெற்றோர் வெறுங்கையுடன் நிற்கும் நிலை. இக் காரணிகள் மாணவரின் பரீட்சைப் பெறுபேற்றினைப் பாதிக்கத் தான்செய்யும் இவற்றால்பெறுபேறு முன்பிருந்த நிலையில் இருந்து குறைவடையவே செய்யும். இச் சூழலில் தவிர்க்க முடியாத ஒன்று. இதற்கு ஆசிரியர், அதிபர் என்ன செய்திட முடியும்?

எனவே இக் காரணங்களால், எமது மாவட்டத்தை நோக்கும் பொழுது பரீட்சை பெறுபேற்றில் சிறிது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதனை யாவரும் ஏற்றுக்கொள்வர்: இது தவிர்க்க முடியாதது

தென் இலங்கையில் உள்ள கல்விச் சூழலையும், கல்வியின் நிலையினையும் நோக்குவோம். அரசாங்கம் வடகீழ் மாகாணங்களைப் பொருளாதார அபிவிருத்தியிலிருந்து புறக்கணித்து ஏனைய பகுதி கல்வியினை பல தசாப்தங்களாக விருத்தி செய்வது கண்கூடு. இதன் பலனாக வசதிகள் உள்ள பாடசாலைகளும் தகுதிவாய்ந்த ஆசிரியர்களும் தென் பகுதிகளுக்குக் கூடுதலாக கிடைக்கின்ற வாய்ப்புள்ளது. மேலும் எமது பிரதேசத்திற்குக் கிடைக்காத கட்புல செவிப்புல தொடர்புச் சாதன வசதிகள் தென் பகுதியில்தாராளமாக உண்டு. ரேடியோ. தொலைக்காட்சி போன்றவற்றில் கல்விச் சேவையினை அறிமுகப்படுத்தி அதன் மூலம் பரீட்சையை மையமாக வைத்து பாடங்கள் ஒலி, ஒளி பரப்புச் செய்யப்படுகின்றன. மேலும் தென் இலங்கையில் கல்வி வசதியின்றி இருந்த பகுதிகள் எல்லாம் விருத்தியடைந்தமையினால் அவர்களுக்குக் கல்வியில் கூடுதலான நாட்டமும் ஊக்கமும் ஏற்பட்டுள்ளன. கல்விக்கேற்ற அமைதியான சூழல் தென் இலங்கையில் நிலவுகின்றது. இத்தகைய சூழலில் தென்பகுதியில் பரீட்சைப் பெறுபேறுகள் உயர்வதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே அவர்கள் பல்கலைக்கழக அனுமதியில் தங்கள் குடித்தொகைக்கு விகிதாசாரமாக திறமை அடிப்படையில் இடங்களைப் பிடிப்பது தவிர்க்கமுடியாதது. இது எமது கல்வியின் வீழ்ச்சியைக் குறிக்கின்றதா?

எமது போர்ச் சூழலையும் பொருளாதாரத் தடையையும் சிங்களப் பகுதிகளின் கல்வி அபிவிருத்தியினையும் வசதிகளையும் கவனத்தில் எடுத்து ஆராயும் பொழுது, எவ்வளவோ வசதியீனங்களுக்கு மத்தியிலும் எமது பரீட்சைப் பெறுபேறுகள் அதிகம் வீழ்ச்சி அடையவில்லை என்றே கூறலாம். வேண்டுமானால் சிங்களப் பகுதியில் கல்வி வளர்ச்சியடைந்துள்ளதாகக் கூறலாம் எமது ஆசிரியர்களின் முயற்சி, ஊக்கம் கடமை உணர்ச்சி என்பன பாராட்டிற்குரியன.

க. பொ. த (உ - த) 1991

(10ஆம் பக்கம் பார்க்க)

# காற்றுவெளி - பட ஆய்வு

> பொருளாதார நிர்ப்பந்தம் மற்றும் இன்றுள்ள சூழ்நிலை மத்தியில் காற்றுவெளியை எடுத்தாலும் ஞானரதன் தனது சுயமான முத்திரையைப் பதித்துள்ளார்.

மதன்

காற்றுவெளி என்று பெயரிடப்பட்டுள்ள முழு நீள வீடியோப் படத்தை ஞானரதன் இயக்கியுள்ளார். படத்தை இயக்குவதுடன் நிற்கவில்லை, வீடியோக் கதையையும் அவரே எழுதியுள்ளார். கதை சுருக்கமாகவும் நேர் கோட்டிலும் அமைந்துள்ளது. வசனகர்த்தாவும் அவரே. இப்படத்தில் மையக் கதாபாத்திரம் என்று எதுவுமில்லை. சமீபத்தில் காட்சிபடுத்தப்பட்ட மற்ற எல்லா வீடியோப் படங்களையும்விட இப்படத்தில் ஒப்பீட்டடிப்படையில் ஆழமான பல விஷயங்கள் உள்ளன. காற்றுவெளி உலகெங்கும் பார்வையாளரை ஈர்க்கக் கூடியது. மொத்தத்தில் இப்படம் திருப்தியாக உள்ளது என்பதை முன்கூட்டியே சொல்லி விடுவது நல்லது.

காலத்தால் அழியாத பல காட்சிகள் இப்படத்தில் பின்னப்பட்டுள்ளன. போராளிகள் சமூக மனிதர்கள். அவர்களுக்கும் உணர்வுகள், போராட்டங்கள், கீறல்கள், அழுத்தங்கள் உள்ளன என்பதை அழகாகவும், சுவையாகவும் இயக்குநர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

முதலில் போராளிகளின் முகாமையும் ஒரு வயோதிபரின் வீட்டையும் அக்கம் பக்கமாகக் காட்டுவதுடன் படக்கதை உருவாகிறது. போராளிகள் இரும்பை அடிப்பதால் ஏற்படும் சத்தத்தால் கஷ்டப்படும் வயோதிபர், 'கொஞ்சம் மெள்ளமாக அடியுங்கோ' என்று கேட்டுக்கொள்கிறார். சத்தம் இப்போது உரக்கக் கேட்கிறது பின் முகாம் பொறுப்பாளரை இடைமறித்து வயோதிபர் இச்சம்பவம் பற்றி விளக்குகிறார். உரிய தண்டனையும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. துவக்கத்தில் பார்ப்பவரின் கோணத்திற்கு வயோதிபரின் பக்கம் நியாயம் இருப்பதாகத் தெரியலாம்.

இதைத் தொடர்ந்து பெரியவர் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து. அவர் வழக்கமாகக் கொடுக்கும் பாலில் தண்ணீர் கலந்து விடுகிறார்கள். கலகலப்பான பேர்வழிகள் நாலுபேர் சேர்ந்து கிண்டல் செய்யும் வேலைதான் இது. இந்தக் கிண்டல் எல்லையைத் தாண்டியதாக இல்லை. குறும்புத்தனம்தான் இதற்கெல்லாம் காரணம். குறும்புத்தனம் செய்தவர்களுக்கு மரத்தில் ஏறி நிற்கும்படி தண்டனை.

வீட்டில் பெரியவர் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், "அம்மாவும் அப்பாவும் எங்களுக்கு உண்டு" என்று தண்டனை அநுபவிப்பவர்கள்தங்கள்பாட்டில் பாடுவது காற்றிலே மிதந்து வருகிறது. அந்த வரிகள் வயோதிபரின் மனதைத் தைக்கின்றன. இக் கட்டம் வரையில் முரண்பிடித்த அவர் இப்போதுதான் செயல்படுகிறார். முகாமில் இருப்பவர்களுக்குத் தேநீர் பரிமாறுகிறார். இவையெல்லவற்றையும் இயக்குநர் அழுத்தமான வரிசையான காட்சிப் படிமங்களால் வெளிப்படுத்துகிறார்.

இங்கு ஒலிக்காட்சி படிமங்களுக்கு தாங்கலாக உள்ளது பின்னணியில் ஆர்ப்பரிப்பது போன்ற இசை இல்லை

வெள்ளிக்கிழமை வயோதிபர் அன்றையதினம் புலால் உண்பதில்லை போராளிகள் கோழியைத் துரத்திப்பிடித்த 'வேகத்தில்' கோழி செத்துப் போகிறது. வயோதிபர் அவர்களுக்கு அதைக் கறியாக்கிக் கொடுக்கிறார் குளியல் முடிந்து அவர் திரும்பி வந்து பார்க்கும் போது வெறும் சட்டி கிடக்கிறது. குழப்பமடைந்த அவர், விஷயத்தை அனுமானித்துத் தன்னைச் சுதாகரித்து கொள்கிறார். இக்காட்சியை நிஜத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, காட்சியைச் சித்தரிக்கும்விதம் பார்த்த கண்களுக்குள் எல்லாம் பதிந்து விடுகின்றன

மேலும், பிறந்த தினத்தன்று சிறுமி தின்பண்டங்கள் வழங்கும் போது போராளி ஒருவருக்கு வீட்டு ஞாபகம் வருகிறது கமிரா 'ட்ராக்' செய்கிறது இங்கு பிளாஷ் பாக் (Flash Back) உத்தியை இயக்குநர் இணைப்பு உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார்

இனி, ஓரிரு சம்பவங்களுடன், கடைசியில் கமிரா, போராளிகள் ஆனையிறவு யுத்தத்துக்குப் போவதைக் காட்டுகிறது. பிறகு இன்னொரு காட்சியில் சண்டை நடக்கிறது. கமிரா சண்டையை வலம் வருகிறது. இம்மாதிரியான காட்சிகளைப் பலர் தேவையற்ற நிகழ்ச்சிகளாகத்திணித்துக் கொள்வது வழக்கம். ஆனால் ஞானரதன் இவற்றைச் சற்றுத் தூரத்தில் வைத்தேகாட்டுகிறார்போர்க் களத்தில் சூட்டி என்ற போராளியின் வீரச்சாவு பின்பு பிரேத ஊர்வலம். மாவீரர் மயானம் சற்றுத் தூரத்தே வைத்துக் காட்டப்படுகிறது. இந்நிகழ்ச்சியை முடித்து விட்டு அடுத்த நிகழ்ச்சியாகப் பெரியவர் ஆஸ்பத்திரியில் காயப்பட்ட போராளிகளைப் பார்வையிடும் காட்சி ஆரம்பமாகிறது. அடுத்து மீண்டும் போராளிகள் வாகனத்தில் பயணிப்பது காட்டப்படுகிறது மரணம் வாழ்க்கையின் முடிவல்ல வாழ்க்கைதொடர்ந்துகொண்டேயிருக்கும் என்பதை இக் காட்சி சித்தரிக்கிறது ஒருகலைஞனுக்குரிய சுயதன்மை இதில் பிரதிபலிக்கிறது.

இன்னொரு விஷயத்தையும் இங்கு குறிப்பிடுவது பயனளிக்கும். படத்தின் முற்பகுதியில் காட்டப்படும் ஒரு பெண்ணின் முகம் பிற்பகுதியிலும் காட்டப்படுகிறது. சூட்டியின் மரண ஊர்வலத்தைப்பார்த்து இரண்டு சொட்டுக் கண்ணீர் விடுகிறாள்; அவ்வளவு தான். கதையம்சத்துடன் ஒட்டிப் போய் இந்தப் பெண்ணின் பார்வையில் மனிதச் செயலை ஆராய்கிறோம் அவள் மௌனத்துடன் பார்த்துக் கொள்வது குழந்தைத்தனமான பார்வையா அல்லது காதலா? அந்தப் பார்வையை 'இது தான்' என்று கூற முடியாது என்பது தான் இதன் சிறப்பு. பாத்திரத்தை நன்றாகப் புரிந்து கொள்ள உதவுவதற்குப் பதில் ஜன்னல் கம்பிகளால் ஒரு குறுக்குச் சுவர் எழுப்பி விடுகிறார் இயக்குநர்.

மற்றும்படி, எல்லா நடிகர்களும் தமது பாத்திரங்களைத் திருப்தியாகச் செய்திருக்கிறார்கள் என்றாலும் வயோதிபராக நடிக்கும் இரட்ணவடிவேல் எனகச்சிதமாக நடித்திருக்கிறார் வயதுக்கும் உருவத்துக்கும் ஏற்ப முகமெழுதப் (Make-up) பட்டுள்ளது தமிழ் சினிமா போல் வாடிக்கைப் பாத்திரங்கள், பழகிப்போன வில்லன்கள் இல்லை ஏட்டிக்குப் போட்டியாக ஏதாவதுசெய்து சிரிக்க வைக்கும் காட்சிகள் இல்லாதது இப்படத்தினுடைய லட்சணம் பாடல்கள படத்தின் ஓட்டத்திற்குத் தடை செய்யாமல் கேட்கும்படி இருக்கின்றன. பாத்திரங்களின் தன்மை மிகைப்படுத்தாமல் இயல்பாகவே நடந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் பல இந்தப் படத்தில் உள்ளன.

மொத்தத்தில் காற்றுவெளி திருதிகரமாக அமைந்துள்ள போதிலும், சம்பவங்கள் விபரிக்கப்பட்டிருக்கிற முறையில் சில விஷயங்களைத் தவிர்த்திருந்தால் படத்தின் சுவை கூடியிருக்கும்: காட்சிப் படிமங்களும், ஒலிப்பதிவுகளும் அர்த்தமுள்ள கோர்வையாக அமைக்கப்பட்டிருந்த போதிலும் (Editing) சில இடங்களில் 'வெட்டி' அடுத்த காட்சியைத் தொடங்குவதைத் தவிர்த்திருக்கலாம் உதாரணம்: வயோதிபர் தேடும் காட்சிகள் வெட்டி (Cut) இணைக்கப்படுகிறது. மாறாக 'மயங்கித் தெளிதல்' உத்தியைப் பாவித்திருந்தால் காட்சி இன்னும் சோபித்திருக்கும் அல்லது 'இருண்டு தெளிதல்' மூலமாகவும் காட்டியிருக்கலாம் 'பிளாஸ் பாக்கில்' சில நிகழ்ச்சிகளைக் காண்பிப்பதைத் தவிர்த்து குறியீடுகள் மூலம் (Symbol) கருத்தை வலியுறுத்த முயற்சித்திருக்கலாம் அப்படிச் செய்வது காட்சிகளை மேலும் களைகட்டச் செய்திருக்கும்.

இந்திய வர்த்தக சினிமாவைப் போல் புலனளவில் மட்டும் அணுகாமல் அறிவுபூர்வமாக அணுகுவதில் இயக்குநர் வெற்றி கண்டுள்ளார். பொருளாதார நிர்ப்பந்தம் மற்றும் இன்றுள்ள சூழ்நிலை மத்தியிலும் காற்றுவெளியை எடுத்தாலும் ஞானரதன் தனது சுயமான முத்திரையைப் பதித்திருக்கிறார்,

# கூரேயை வெளியேற்றிய பின்பும்

# டி. பி. யின் தலைவலி தீரவில்லை

சிறிசேன கூரேயை ஐக்கிய தேசிய கட்சி பொது செயலாளர் பதவியில் இருந்து விலக்கியதை தொடர்ந்து காமினி திஸாநாயக்காவின் பாராளுமன்ற பிரவேசத்திற்கு எந்த ஒரு தங்குதடையும் இருக்காது என ஆளும் ஐக்கிய தேசிய கட்சியினர் எதிர்பார்த்தனர்.

ஆனால் சிறிசேன கூரே பதவி துறக்க முன்னரே காமினியை பாராளுமன்ற உறுப்பினர் ஆக்குவதற்கு இருந்த தடை கட்சிக்குள் கிசுகிசுவாக மட்டுமே இருந்தது. அது கட்சி மட்டத்திலே தோன்றினாலும் வெளிப்படையாக விவாதிக்கப்படாதஒன்றாகவே இருந்தது. ஆனால்இன்று கட்சிக்குள்ளே பல மணித்தியால கணக்கில் விவாதம் நடத்தும் ஒரு விடயமாகவும், பொது செயலாளருடன் உறுப்பினர்கள் நேரடியாக மோதும் ஒரு விவாதமாகவும் மாறி விட்டதை காணக் கூடியதாக இருந்தது.

சிறிசேன கூரே பொது செயலாளர்பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து பல உறுப்பினர் தமது உறுப்பினர் பதவியை தொடர்ந்துகெட்டியாகப்பிடித்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பதுடன் தற்போதைய ஜனாதிபதி நினைத்த காரியத்தை எடுத்த எடுப்பிலே கட்சிக்குள்ளே செய்ய முடியாத அளவு ஓர் பலவீனத்தை அடைந்தவராகவும் மாறிவிட்டார்.

## பிடுங்குவது களை அல்ல ஆணி வேரையே

இதேவேளை கட்சி புனரமைப்பு, மற்றும் தேர்தல் நோக்கி செல்லும் பயணம் என்ற போர்வையில் சிறிசேன கூரே, மற்றும் பிரேமதாசா ஆதரவாளர்களை களைபிடுங்கும் நடவடிக்கைகளில் புதிய பொதுச் செயலாளர் ஜனாதிபதிக்குஇசைவாக நடந்துகொள்கின்றார் ஆனால் இவர்கள் பிடுங்குவது கட்சியின் களை அல்ல கட்சியின் ஆணிவேர் என சிறிசேன கூரே தெரிவித்துள்ளமை கட்சி அவரின் நிலை இன்னமும் குறிப்பிடத்தக்க பலமான நிலையில் இருப்பதையேகாட்டுகின்றது.

இவ்வாரம் நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் பொதுச் செயலாளர் சந்திப்பில் பல உறுப்பினர் அச்சமின்றி வெளிப்படையாக பல கருத்துக்களை தெரிவித்தமை கட்சி எதிர்நோக்கியுள்ள நெருக்கடியை மேலும் தெளிவாக காட்டியுள்ளது. இக்கூட்டத்தில் உறுப்பினர்கள் ''நாம் இன்று மக்கள் முன்னிலையில் செல்ல முடியாதுள்ளது. இதற்குக் காரணம் கட்சி இன்று கடைப்பிடிக்கும் கொள்கையே முதலில் இதனை சீர்செய்யுங்கள். அதன் பின்னர் நாம் மக்கள் முன்னிலையில் செல்கின்றோம் என திட்டவட்டமாக அடித்து சொல்லி விட்டனர்.

ஐக்கிய தேசிய கட்சி அதன் வரலாற்றில் இவ்வளவு தூரம் மோசமான நிலையை என்றும் சந்தித்தது கிடையாது. அதாவது பொது தேர்தலில் படு தோல்வியை அடைந்து ஒருசில பாராளுமன்ற ஆசனங்களை மட்டும் கொண்டிருந்த நிலையில் கூட கட்சி இவ்வாறான உட்பூசலைகூட எதிர்நோக்கவில்லை. ஆனால் இதற்கு காரணம் தென்மாகாணசபை தோல்வி அல்ல என்பது மட்டும் நிருபணம்.

அதாவது பிரேமதாசாவின் மறைவும் அதனைத்தொடர்ந்து ஏற்பட்ட ஐக்கிய தேசிய கட்சி கொள்கை மாற்றமே இதற்கு காரணம் என தெளிவாகியுள்ளது இன்று ஐ.தே.க எங்குசெல்வது என்ற விடயத்தில் கண்பார்வை மங்கிய நிலையில் ஓர் தெளிவில்லாத பாதையில் சென்று கொண்டிருக்கின்றது

ஆளும் கட்சி உறுப்பினர்களிடையே ஏற்பட்டுள்ள போட்டிகளினால் இன்றுகட்சி ஆட்டம் காண தொடங்கியுள்ளது. இதனால் சகல உறுப்பினர் மீதும் சந்தேக கண் கொண்டு பார்க்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதற்கு அண்மையில் ஆளும் கட்சிகு எதிராக பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தில் பல முன்னணி அமைச்சரவை அமைச்சர்களே தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்காது சபையை விட்டு வெளியேறியமை எடுத்துகாட்டியுள்ளது.

இந்தநிலையில் தொடர்ந்து காமினி திஸாநாயக்காவை பாராளுமன்றத்திற்குகொண்டு வருவது தொடர்பாக மேலும் முயற்சிகளை ஐக்கிய தேசிய கட்சிதலைமை மேற்கொள்ளுமாயின் கட்சியைவிட்டுபலர் வெளியேறுவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது அல்லதுகட்சிஉறுப்பினர்ஒன்றுசேர்ந்து தலைமைப்பீடத்தை வெளியேற்றிவிடும் நிலை கூட தோன்றினால்கூட (அதற்கும்) ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இத்தனை தடைகளையும் வரம்புகளையும் மீறி ஜனாதிபதி செயல்படுவாராயின் இது ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்காலத்தையே ஓர் கேள்விக்குறி என்றநிலைக்கு தள்ளிவிடும் என பலரும் எதிர்பார்க்கின்றார்கள்

## மீண்டும் ஓர் ஜே. ஆர். யுகம்

எதுஎப்படி இருந்த போதும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் அனேகமாக தற்போதைய உறுப்பினர் போட்டியிடப் போவதில்லை என்பதுமட்டும் உறுதிசெய்யப்பட்டுள்ளநிலை காணப்படுகின்றது ஐதேகவை சேர்ந்த பல முன்னணி உறுப்பினர்களுக்கு கட்சி அபேட்சகர் நியமனம் இடைக்கப்போவதில்லை இவர்கள் தென்னிலங்கையில் ஜே.வி.பி உச்ச கட்டத்தை அடைந்த காலங்களில் தமது உயிரை பணயம் வைத்து கட்சிக்காக வேலை செய்தவர்கள் அதாவது பிரேமதாசாஆதரவாளராக இருப்பார்கள். இந்த நிலை எவ்வளவு தூரம் கட்சியின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் என்பது தேர்தல் முடிவுகளில் தான் காணலாம். அனேகமாக தேர்தலில் போட்டியிட முன்னரே கட்சி வேட்பாளர்களில் இருந்து திகதியிடாத இராஜினாமாகடிதத்தை மீண்டும் ஐ தே. க. தலைமைப் பீடம் கேட்டுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு இராஜினாமா கடிதத்தை வழங்கியவர்களுக்கு மட்டுமே தேர்தலில் போட்டியிட கூடியகட்சி அபேட்சகர் பத்திரத்தை வழங்கப்படும் வாய்ப்பும் உண்டு. இதே சமயம் கட்சி நினைத்த நேரம் இவர்களை வெளியேற்றும் வாய்ப்பினையும் கொண்டிருக்கும். அண்மையில் இது தொடர்பாக கட்சியின் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீவிரமாக ஆராயப்பட்டது.

நிமலராஜன்

தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கும் இதே நிலை தோன்றும் எனவும் எனவே எதிர்காலபாராளுமன்றத்திற்குதெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர் தமது திகதியிடாத இராஜினாமா கடிதத்தின் அச்சுறுத்தலுக்கு அமையவே நடந்து கொள்வார்கள் என்றும் இது மீண்டும் ஓர் ஜே. ஆர். யுகம் ஒன்றை உருவாக்கும் எனவும் பேசப்படுகின்றது-

இதேவேளைதலைமையுடன் முரண்பாடு கொண்ட ஐ தே க. உறுப்பினர்கள் மீது ஊழல் மற்றும் மோசடி, கொலை குற்றச்சாட்டுகளை சுமத்தி அவர்களை அரசியலில்இருந்து ஓரம் காட்டிவிடலாம் என தற்போதைய ஜனாதிபதியும் அவரின் ஆடவைக்கும் கூட்டும் வெகுவாக நம்புகின்றது இதன் அடிப்படையில் ஓரிரு சம்பவங்களை முன் வைக்க பரவலாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும்வருகின்றது. ஆனால் இது தனிப்பட்டதைவிட கட்சிக்கே பாதிப்புக்களை ஏற்படுத்த கூடியதாகும். ஆனால் கட்சியின் அதிகார துஷ்பிரயோகம் என்றும், வன்முறை என்றுமே மக்கள் மனதில் இவை பதியும் நிலையே உருவாகும்.

## ஆட்டிப் படைப்பவர் ஜே. ஆர்:

பம்பரத்தை சுற்றிவிட்டு அது சுழலும் வேகத்தை பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தையை போல ஐ. தே. கட்சியை சுழலவிட்டு விட்டு ஓரத்தில் ஓதுங்கி அதன்மீது ஒரு பார்வையை செலுத்திய வண்ணமும், தருணம் அறிந்து மீண்டும் ஒருமுறை சுழலவிடும் தந்திர உபாயத்தையும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேற்கொண்டு வருகிறார்.

தம்மை மீறிச் செல்லும் சம்பவங்களின் போது தான் அரசியலில் ஈடுபட விரும்ப மாட்டேன் என மத்தளம் தட்டிக்கொண்டு தனக்கு சாதகமானவர்களை ஏவிவிட்டு விட்டு மௌனமாகி விடுகின்றார்.

ஆனால் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டதாக தம்பட்டம் அடித்தபோதும் இன்றைய ஐ தே கவை ஆட்டிப் படைக்கும் ஒரு சர்வாதிகாரியாக ஜே. ஆர். ஜெயவர்த்தனாவே உள்ளார். பல பொம்மைகளை முன்னணியில் வைத்து தனது கைகளிலே நூல்களை வைத்திருக்கும் ஒரு பொம்மலாட்டி போன்று அவர் செயல்படுகின்றார்.

இதுவரை ஐ தே கவில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு அணி இருந்து செயல்பட்டது. ஆனால் இன்று அவ்வாறான தனக்கென எந்த ஓர் அணியும் இல்லாதவராக டி பி விஜேதுங்கா செயல்படுகின்றார் இது சில சமயங்களில் அவரை ஐ தே கவிலிருந்து தூக்கி எறிவதற்கு சார்பாக அமைந்து விடக் கூடும்

## டி. பிக்கு தளம் இல்லாத நிலை

தற்போது பிரேமதாசா அணிகளை வெளியேற்றி வரும் இவர்கட்சிக்கு புதிதாக கொண்டுவருபவர்கள் காமினியின் ஆதரவாளர்களே ஆகும் அண்மைக்காலத்தில்சிறிசேன கூரேயை பொதுச்செயலாளர் பதவியிலிருந்து நீக்கிய பின்னர் கொண்டுவந்த புதிய பொதுச்செயலாளர் காமினி விஜேசேகரா காமினி திஸாநாயக்காவின் ஆதர வாளர் இதே போன்றே ஏனைய நியமனங்களும் நடைபெற்று வருகின்றன இந்த நிலை தொடர்ந்து இடம் பெறுமானால் சிறிது காலத்தில் டி பியும் தூக்கி எறியப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை அப்போது தனியே டி பி விஜேதுங்கா ஓரங்கட்டி விடப்படலாம் இதன்பின்னர் இவர் அரசியல் என்ற விடயத்தை கனவுக்காட்சியாக மட்டுமே காணக்கூடிய நிலை ஏற்படும்

தளம் இல்லாத அரசியல் தலைமை பதவி என்பது துடுப்பற்ற ஒரு படகுபோன்று காற்றடித்த பக்கமெல்லாம் இழுத்து செல்லப்படுமே தவிர தனக்கென ஒரு பயணம் அமையமாட்டாது இது டி பியின் அரசியல் வாழ்விலும் பொருந்தும்

---

# இந்தியாவும் ஏவுகணைத் தொழில் நுட்பமும்

இந்தியாவின் சொந்தத் தொழில்நுட்பத்தினால் உருவாக்கப்பட்ட வளர்ச்சிமிகு செய்மதி ஏவுகலம் (ஏ. எஸ். எல். வி) ஒன்றை கடந்த புதன்கிழமை வெற்றிகரமாக ஏவியுள்ளது. இவ்வாறான வளர்ச்சிமிகு செய்மதி ஏவுகலங்கள் முன்னர் மும்முறைகள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டபோது முதலிரு முறைகளிலும் தோல்வியில் முடிவடைந்தன. மூன்றாவது முறை ஏவப்பட்டபோது அது செய்மதியை குறிப்பிட்ட பாதையில் செலுத்தத்தவறிவிட்டது.

42 தொன் நிறையுடைய இந்த ஏவுகலம் 133 கிலோ நிறையுடைய ரோகினி எனும் செய்மதியை பூமியிலிருந்து சுமார் 439 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள சுற்றுவட்டப் பாதையில் வெற்றிகரமாக இயங்க வைத்துள்ளது. இத்தூரமானது எதிர்பார்க்கப்பட்டதைவிட 39 கிலோ மீற்றர் அதிகம் என 'இஸ்ரோ' என அழைக்கப்படும் இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பு கூறியுள்ளது. இதனால் 8-9 மாதங்கள் வானில் இயங்கும் என எதிர்பார்க்கப்பட்ட இச்செய்மதி இப்போது ஒரு வருட காலத்திற்கு இயங்குமெனக் கூறப்படுகிறது

இந்தியாவின் சொந்த ஏவுகணைத் தொழில்நுட்பம் சமீப காலத்தில் திடீர் வளர்ச்சியைக் கண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ரஷ்யா இவ்விடயத்தில் இந்தியாவைக் கைவிட்டமை இதற்கொரு காரணமாகக் கூறப்படுகிறது. ஏவுகணைத் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பது என 1993 பெப்ரவரியில் ரஷ்யாவும் இந்தியாவும் ஒப்புக்கொண்டிருந்தன. இதற்கமைய ஏவுகணை செலுத்தப் பயன்படும் 'கிறையோனிக்' எனும் உயர் தொழில்நுட்ப இயந்திரங்களையும் அதற்குரிய தொழில்நுட்பங்களையும் இந்தியாவுக்கு வழங்க ரஷ்யா சம்மதித்திருந்தது. ஆனால் ஜி-7 நாடுகளிடையே ஏற்பட்ட ஏவுகணைத் தொழில்நுட்பத்தை பிறநாடுகளுக்கு வழங்குவதில்லை என்ற உடன்பாட்டைச் சுட்டிக்காட்டிய அமெரிக்கா, ஜி-7 அமைப்பில் இணையக் காத்திருந்த ரஷ்யாவை இத்தொழில் நுட்பங்களை இந்தியாவுக்கு வழங்கக்கூடாதென தடுத்துவிட்டது. இதனையடுத்து இந்தியா தனது சொந்தத் தொழில் நுட்பத்தை வளர்த்துக் கொள்வதில் தீவிர அக்கறை காட்டத் தொடங்கியது.

கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி ''அக்கினி'' எனும் தரையிலிருந்து தரைக்குப் பாயும் ஏவுகணையை வெற்றிகரமாகச் செலுத்தியபோது ''தொழில்நுட்ப வல்லமையை'' காட்டி விட்டதாக இந்தியா கூறிக் கொண்டது. 1500 கி. மீ. தொடக்கம் 2500 கி. மீ. தூரத்திற்கு ஒருதொன் வெடிப்பொருளை காவிச் செல்லக் கூடியது 'அக்கினி'. இந்தியா எவ்வாறு கூறிய போதும் பாதுகாப்பு ஆயுதங்களுக்கு இத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டதை இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகளின் கூற்றுக்கள் வெளிப்படுத்தத் தவறவில்லை. இந்திய பாதுகாப்புப் படைகள 'பிரிதிவி' எனும் நடுத்தர ஏவுகணைகளைக் கைவசம் வைத்திருப்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. இவ்ஏவுகணை மூலம் பாகிஸ்தானின் எப்பகுதியையும் தாக்கும் வல்லமை படைத்ததாக இந்தியா உள்ளது. அக்கினி ஏவுகணை வெற்றி மூலம் சீனாவின் எப்பகுதியையும் தாக்கும் வல்லமையை இந்தியா பெற்றுள்ளமை வெளிப்படை- மேலும் இதனை பிரயோகிக்கும் அளவுக்கு அமைப்புகள் தயாராகி விட்டதாக ஆயிரம் கோடி ரூபா செலவிலான இந்திய பாதுகாப்பு ஆய்வுத் திட்டத்தின் முதல்வர் கலாம் கூறுகிறார்- இவ்வாறான ஏவுகணைகள் ''எதிரிகளை ஒங்காதிருக்க'' விடுக்கும் எச்சரிக்கை என்றும் அவர் கூறுகிறார்-

சி. சிவபாலன்

இந்தியாமேலும் மூன்றுரக ஏவுகணைகளை சமீப காலத்தில் வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது. தரையிலிருந்து வானுக்கு ஏவப்படும் சாம் ரக ஏவுகணையான 'ஆகாஷ்' வெற்றிகரமாகஏவப்பட்டுள்ளது 25 கிலோ மீற்றர் தூரம் பாய்ந்து வான்

(11ஆம் பக்கம் பார்க்க]

llur Branch Library

# மண்டேலா நிகழ்த்த வேண்டிய இரண்டாவது அற்புதம்

பாலகுமாரன்

சென்ற 9ஆம் திகதி கேப்டவுனிலே புதிய தென்னாபிரிக்காவின் முதல் நாடாளுமன்றம் கூடிய காட்சி இன்னமும் உலகத்தவர் கண்களைவிட்டு அகலவில்லை. மண்டேலாவோடு ஆயுள்தண்டனைபெற்ற மறைந்த தலைவரான வோல்டர் சிசிலுவின் துணைவியார் முன்மொழிய ஆபிரிக்க தேசிய காங்கிரசின் கட்சிச் செயலாளர் சிறில் றமபோசா வழிமொழிய மண்டேலா சனாதிபதியானார். இதுவரை காலமும் ஆபிரிக்கானர் எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் வெள்ளை இனத்தவரால் இழிசனராகக் கருதப்பட்டவர்கள்- போராளிகளாக ஆயுதம் தாங்கிப் போராடியவர்கள்- சிறைப்பறவைகளாக நீண்டகாலம் வாழ்ந்தவர்கள்- தமது மக்களின் ப்ரதிநிதிகளாக மாற்றம் பெற்ற தோற்றம் என்றும் மறக்க முடியாதது. அவ்வாறே மறுநாள் பிரிட்டோரியாவில் 120க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் 5000க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் இலட்சக்கணக்கான மக்கள் பார்த்திருக்க தனது இரு உப சனாதிபதிகளான டி கிளார்க் கோடும், தாபோ ஒம்பேக்சியோடும் (மண்டேலாவுடன் சிறையிலிருந்த கோபான் எம்பேக்சியின் புதல்வர்) மண்டேலா முறைப்படி பதவியேற்றமை இந்த நூற்றாண்டின் இணையற்ற வரலாற்று நிகழ்வாக பதிவாகியது. கேப்டவுனில் தெரிவாகி பிரிட்டோரியாவில் பதவியேற்றமையானது - மண்டேலாவின் அரசியல் வாழ்வின் நெடும் பயணத்தை குறிக்கிறது. 27ஆண்டுகளில் 17 ஆண்டுகளை கேப்டவுனில் றொபின் தீவில் கழித்த அவர் அன்று சிறைக்கைதியாக - இன்று சனாதிபதியாக என அவர் வாழ்வில் ஏற்பட்ட பாரிய மாற்றத்தை குறிக்கின்றது.

கடைசிவரை என்னவாகுமோ என எண்ண வைத்த தென்னாபிரிக்காவின் விடிவிற்கு தடையாக இருந்த காரணிகளை இன்று மண்டேலா தாண்டிவிட்டார். தனதுஅமைதியான, ஆனால் உறுதியான முடிந்தவரை விட்டுக்கொடுக்கும்-ஆனால் கொண்ட கொள்கையில் பிடிவாதமான அவரது அணுகுமுறை அவரை வரலாறு பிறப்பித்த தலைவராக்கி விட்டது.

எனவே கடந்த மாதம் 25ஆம் திகதி முழு நிலவு நாளின் நள்ளிரவுக்கு சற்று முன்னர் அடக்குமுறையின் அவமானத்தின் சின்னமான வெள்ளையர் கொடி இறக்கப்பட்டு நள்ளிரவின் பின்னர் 26ஆம்திகதி தென்னாபிரிக்காவின் வரலாற்றையும் வளத்தையும் பிரதிபலிக்கும் புதிய ஆறு நிற வர்ணக் கொடி ஏற்றப்பட்ட போது கறுப்பர்கண்கள் நீரைச் சொரிந்தன. ஏனென்றால் தாம்பட்ட தாங்கொண்ணாத கொடுமைகளை சகிக்க முடியாத அவமானத்தை வெள்ளையர் காறி உமிழ்ந்த எச்சிலாகிப் போனதமது பழைய வாழ்வை அவர்களால் மறக்க முடியுமா? எனவே அடக்குமுறைஅகன்று ஒரு அற்புதம் நிகழ்ந்து விட்டது என்பதற்கு சான்றாக ஐ.நாவிலும் அவர்கள் கொடி ஏற்றப்பட்ட போது தமிழீழம் உட்பட்ட அடக்குமுறைக்கு எதிராக போராடும் மக்கள் தொகுதியினர் தாம் வெற்றி பெற்றதுபோல் மகிழ்ந்தனர். புத்தூக்கம்பெற்றனர். குறிப்பாக விடிவின் வாசலை எதிர் நோக்கியிருக்கும் எமது மக்கள் இரட்டிப்பு மகிழ்வு அடைந்தனர்.

இன்று எல்லோரும் மண்டேலாவை வாழ்த்துகிறார்கள். அடக்குமுறை அரசுகளும் வாழ்த்துகின்றன. அவரை காந்தீய வாதியாக சித்தரிப்போரும் உள்ளனர். போராட வக்கற்றவர்கள் அவரை ஒரு மிதவாதியாக பேச்சுவார்த்தைகளில் மட்டுமே நம்பிக்கை கொண்டவராகவும் சித்தரிக்க முயல்வது வரலாற்று அபத்தம் மட்டுமன்றி தென்னாபிரிக்க மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றையே கொச்சைப் படுத்துவதாகி விடும். 1990ஆம் ஆண்டின் பின் டி கிளார்க் மனப்பூர்வமாக பேச முற்பட்டு மண்டேலாவை விடுவித்து கட்சித் தடையை நீக்கி தனது அதிகாரத்தை கைமாற்றம் செய்ய முனைந்த போது அதற்கேற்பமண்டேலா செயற்பட்டதையும் அவர் காந்தி, மாட்டின் லூதர் கிங் போன்றோரை விதந்துரைத்ததையும்வைத்தே எவரும் ஒரு முடிவுக்கு வர முடியாது அன்றிலிருந்து இன்று வரையான தென்னாபிரிக்க மக்களின் போராட்டமானது போர்த் தன்மையே கொண்டது, இதற்கு வரலாறே சான்று.

17-ம் நூற்றாண்டில் தமது ஆசியக் குடியேற்றங்கட்கு பயணிப்பதற்கு இலகுவாக ஆபிரிக்க தென் முனையான கேப்பில் 'நன்னம்பிக்கை முனை) டச்சுக்காரர் குடியேற்றங்களை உருவாக்கிய காலம் தொட்டு பின் 1795-ம் ஆண்டளவில் ஆங்கிலேயர் வந்த பின் கறுப்பின சூலு மக்கள் அன்னிய ஆக்கிரமிப்பாளருக்குஎதிராக நடாத்திய போர்கள் வீரம் செறிந்தவை. 1879-ம் ஆண்டுஇசாந்தில்வானா என்னும் இடத்தில் பிரித்தானிய சாம்ராச்சியப் படைகளை அவர்கள் மண் கவ்வ வைத்தனர். அவர்களது தலைவன் 'பம்பாட்டா' தலைமையில் 1906-ம் ஆண்டு அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ந்து எழுந்த போது அவர்கள் மிகக் கடுமையாக அடக்கப்பட்டனர் இத்தகைய வீரவரலாறுகளே 1918-ம் ஆண்டு பிறந்த மண்டேலா போன்றோரை தூண்டி எழுச்சி பெறச் செய்தது என்பது வரலாற்று உண்மை. அதுபோலவே டச்சுக்காரர் ஏனைய ஐரோப்பியரோடு கலந்து உருவாக்கிய இனத்திற்கு போயர் (Boer) எனப் பெயரிட்டுபின் 1809-ம் ஆண்டளவில் ஆங்கிலேயரும், இவர்களும் கடும் போரிட்டு (போயர் போர்கள்) இப் பகுதியைதமக்குள்பங்கிட உடன்பாடு கண்டு 1910ஆம் ஆண்டளவில் தென்னாபிரிக்க ஒன்றியம் என ஒரு நாட்டை உருவாக்கி கறுப்பரை அடிமைகளாக்கினர். அன்றிலிருந்து தம்மை ஆபிரிக்கானர் என்றும், ஆங்கிலமும் டச்சும் கலந்த தமது புதிய மொழியை ஆபிரிக்கான்ஸ் என்றும் இவர்கள் அழைக்கலாயினர். தொடக்கத்தில் 1912ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆபிரிக்கதேசிய காங்கிரஸ் தமது தாயகத்தின் இயற்கை வளங்களான வைரம், தங்கம் போன்றவற்றை தமது உடைமையாக்கிய இவர்கட்கு எதிராக அகிம்சை முறையில் போராடினர். ஆயினும் இக்கட்டமும் 1961ஆம் ஆண்டளவில் முடிவிற்கு வந்தது. புதிய போராட்ட ஏடு தொடங்கப்பட்டது.

(1940 களிலேமண்டேலா, வால்டர் சிசிலு, ஒலிவர் தாம்போ போன்றோர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் வாலிபர் அணியில் சேர்ந்து இயங்கினர்.) 1958ஆம் ஆண்டுஇவர்களிடமிருந்து பிரிந்து போன P.A.C எனப்படும் பரந்த ஆபிரிக்க மாநாட்டுக் கட்சி AN.C யின் மிதமான போக்கினைக் கண்டித்து செயற்பட்டது. இவர்கள் 1948ம் ஆண்டு பதவிக்கு வந்த தேசியக் கட்சி அரசு கடைப்பிடித்த நிற வேற்றுமை (Apartheid-ஆபிரிக்கான்ஸ்மொழிச் சொல்) கொள்கைக்கு எதிராக 1960-ம் ஆண்டு மார்ச் மாதம்சார்ப்வில்(Sharpville) காவல் நிலையத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்த போது 69பேர் அவ்விடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர் சார்ப்வில்படுகொலையானது (Sharpville Massacre)ANC யின் போராட்ட வழிமுறையையே தலைகீழாக மாற்றியது.

ஆயுதம் தாங்கிப் போராடுவதே ஒரே வழி என்கிற முடிவுக்கு ANC யின் உறுப்பினர் அனைவருமே வர நேர்ந்தது. எனவே 1961ம் ஆண்டு டிசம்பர் 16-ம் நாள் அகிம்சைக்கொள்கை என்கிற அத்தியாயம் முடிவிற்கு வருகின்றது எனக்கூறிய மண்டேலா ''தேசத்தின் ஈட்டி'' (Umkhonto we Sizwe Spear of the Nation) எனப்படும் தமது அமைப்பின் இராணுவப் பிரிவை ஆரம்பித்தார். அப்போது அவர் ''மக்களது பொறுமைக்கும் எல்லையுண்டு. ஒவ்வொரு தேசத்தின் வரலாற்றிலும் ஒரு தருணம் வரும். அப்போது இரண்டே இரண்டு வழிகள் தான் தென்படும். பணிந்து போதல் அல்லது துணிந்து போராடுதல். இப்போது அத்தருணம் தென்னாபிரிக்காவிற்கு வந்துவிட்டது'' எனக் கூறினார். அவர் கைதாகி தென்னாபிரிக்க நீதிமன்றிலே நிறுத்தப்பட்ட போது 1964ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் திகதிய புகழ்பெற்ற தனது வாக்கு மூலத்திலே ''வன்முறைப் போராட்ட வழிமுறைமைக்கு நானே திட்டம் தீட்டினேன் என்பது உண்மை. வருவது வரட்டும் என்றோ அல்லது வன்முறை மீது காதல் கொண்டோ இதை நான் செய்யவில்லை. எனது மக்கள் பல்லாண்டு காலமாக அனுபவிக்கும் கொடுமைகளுக்கு காரணமான அரசியல் சூழலை நன்கு அமைதியாக நிதானமாக மதிப்பீடு செய்த பின்னரே இம் முடிவிற்கு வந்தேன்'' என்றார்.

1976ஆம் ஆண்டு யூன் மாதம் நடைபெற்ற சுவெட்டோபடுகொலைகள் (Soweto) கறுப்பர் பள்ளிகளில் ஆபிரிக்கான்ஸ் மொழியை புகுத்த முயன்ற போது சுவெட்டோவில் 20,000க்கு மேற்பட்ட மாணவர் எதிர்ப்பு பேரணி நடத்தும் போது 300 மாணவர் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்ச்சி) பின் ஏ.என். சியின் போராட்டம் மேலும் விரிவானது வரலாறு. 'தேசத்தின் ஈட்டி' படையணியின் நீண்டகால தளபதியாக மண்டேலா இருந்ததும் தமது தலைமறைவு வாழ்க்கையின் போது அல்ஜீரியாவில் முறையாக இராணுவப் பயிற்சி பெற்றதும் இங்கே சொல்ல வேண்டிய செய்திகள்.

இப்போது விடிவைஎண்ணி மகிழும் போது அம் மக்களும் மண்டேலாவும் பட்ட துயரங்களை, தாண்டிய நெருப்பாறுகளை நாம் ஒருகணம் மனம் கொள்ள வேண்டும். 1990ஆம் ஆண்டு மண்டேலா சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னரும் அவர் பட்ட துன்பங்கள் கணக்கற்றவை. அவரது சொந்த வாழ்வே சிக்கலானவை. 1958ஆம் ஆண்டு தனது முதல் மனைவியைப் பிரிந்த பின் வின்னியை இரண்டாவது மனைவியாக ஏற்று சிலகாலமே அவர்வாழ்ந்திருந்தார். 1964ம் ஆண்டு யூன்மாதம் அவர்சிறைப்பட்ட பின்பும் இப்போது விடுதலையாகிய பின்னரும் அவரது 34 வருடமணவாழ்க்கையும் முடிவிற்குவந்தது. தனது அரசியல் நேர்மைக்காக அவர் கொலைக் குற்றம் சாட்டப்பட்ட வின்னியை விட்டுப்பிரிந்தார். அது போலவே 1990ஆம் ஆண்டு மாசி மாதம் 11ஆம் திகதி அவர் விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து இற்றைவரை 15,000 மேற்பட்ட கறுப்பின மக்கள் படுகொலைகள் அவர் கண்முன்னே நடந்தது. 1993ஆம் ஆண்டு ஏப்ரலில் அவரது வலது கரமாக திகழ்ந்தவரும், 'தேசத்தின் ஈட்டி' யின் தளபதியாகவும் செயற்பட்ட பொதுவுடமைக் கட்சித் தலைவர் கிறிஸ்கானியை அவர் இழந்தார். பேச்சுவார்த்தைகள் நடக்கும் போதே தென்னாபிரிக்க இரகசியப் பொலிசார் மண்டேலாவிற்கு பெருத்த குழப்பத்தைக் கொடுக்க கறுப்பரிடையே பிளவுகளை உருவாக்க - இன்காதா சூலுக் கட்சியினருக்கு இரகசியமாகபயிற்சிகள்அளித்துஆயுதங்கள்வழங்கிகொலைக்குழுக்களைஉருவாக்கியமை, இக் கொலைக் குழுக்கள், கறுப்பின மக்கள் பயணம் செய்யும் வாகனங்களில் புகைவண்டிகளில் குண்டுகளை வெடிக்க வைத்து அவர்களது குடியிருப்புகளைத் தாக்கி பல பொது மக்களைக்கொன்றமை (இப்போது நீதிபதி கோல்ஸ்ரோன் தலைமையிலான விசாரணைக்குழு இவ்வுண்மைகளை அம்பலப்படுத்தி விட்டது) மண்டேலாவிற்கு தாங்க முடியாத தொல்லைகள் ஆயின. எனினும் அவர் மனம் தளரவில்லை.

இவை மட்டுமா? தென்னாபிரிக்கா கறுப்பர்கட்கு மட்டுமே உரியது என்கிற தீவிர வாதநிலைப்பாட்டை எடுத்த பரந்த ஆபிரிக்க மாநாட்டுக் கட்சியான பி. ஏ சியின் (Pan African Congress) இராணுவப் பிரிவான அசானியர் மக்கள் விடுதலை இராணுவம்-வெள்ளையரைக் கொன்று குழப்பங்களை ஏற்படுத்தியது. அதுபோலவே விலோஜன் எனப்படும் வெள்ளையின இராணுவ தளபதி தலைமயிலான வெள்ளையின தீவிரவாத குழுவொன்று வன்முறைவழிகளைகையாள முயன்றது. இவற்றைவிட 'பண்டுஸ்தான்' எனப்படும் வெள்ளையர் உருவாக்கிய கறுப்பின தாயகப்பகுதிகளை சிஸ்காய், போஸ்த்துவானா, குவாசுலு பகுதிகள்தேர்தலில் தாம் பங்குபற்ற மாட்டோம் என்றன. ஆனால் இவையெல்லாம் இன்று மண்டேலாவினதும், கிளார்க்கினதும் இடைவிடாத இணக்க முயற்சிகளின்விளைவாக இப்போது தேர்தல்களிலும் பங்குபற்றி தேசிய இணக்க அரசில் அங்கம் வகிக்கவும் செய்கின்றன.

புதிய தேர்தல் நடப்பதற்கு 7 நாட்கள் இருக்கும் நிலையில்தான் மண்டேலாவின் அரசியல் எதிரியான சூலுஇன்காதா சுதந்திரக் கட்சியின் தலைவரான புத்த லேசியோடு உடன்பாடு காண முடிந்தது. புத்தலேசியின் மூர்க்கமான பிடிவாதத்தை மண்டேலா தனது அணுகுமுறையின் காரணமாக இறுதியில் வெற்றி கண்டது ஒரு அதிசயமாகவே கருதப்படுகின்றது. முன்னர் தென்னாபிரிக்க ஆக்கிரமிப்பாளரோடு கடுமையாக மோதிய மறவர் பரம்பரையான சூலு இனமக்களின் மரபுரிமை மன்னரான குட்வில் சுவெலத் தினியின் மரபுரிமை மன்னர் பதவியை சட்டரீதியாக ஏற்றுக் கொள்ள மண்டேலா சம்மதித்தார். ஆனால் கூடிய அதிகாரங்கள் கொண்ட இணைப்பாட்சி வேண்டும் என்கிற புத்தலேசியின் இன்னுமொரு கோரிக்கையை மண்டேலா ஏற்கவில்லை. தனக்கு இப்போதைக்கு வேறு வழியில்லை என்பதை உணர்ந்த புத்தலேசியும் தேர்தலில் பங்குபற்ற சம்மதித்தார். எனவே கடைசி நிமிடத்தில் 900க்கு அதிகமான வாக்களிப்பு நிலையங்கள் குவாசுலுவில் திறக்கப்பட்டன. 26 கட்சிகளே உள்ளடங்கிய வாக்குச் சீட்டில் 27-வது கட்சியாக இன்காதா கட்சியின் சின்னம் ஒட்டப்பட்டது. எனவே தேர்தல் நடக்கும் போது வன்முறைகள்வெகுவாக குறைந்த போதும் வலதுசாரி வெள்ளையின தீவிரவாத சிறு குழுவொன்று 17க்கு மேற்பட்ட பாரிய குண்டு வெடிப்புக்களை நிகழ்த்தி 40க்கு மேற்பட்ட கறுப்பின மக்களை பலியெடுத்தும் தென்னாபிரிக்க விடிவைத் தடுக்க முடியவில்லை.

இப்போது தேர்தல் முடிவுகள் மண்டேலாவிற்கு அறுதிப் பெரும்பான்மைக்கு (66 6) அருகில்65விழுக்காட்டுவாக்குகளை பெற்றுக் கொடுத்துள்ளன. மொத்த சனத்தொகையினை 40 மில்லியனில் 23 மில்லியன் வாக்களிக்கும் தகுதிபெற்றவர்களில் 16.3 மிலியன் கறுப்பின வாக்காளர்களாவர். இவர்களில் மொத்தவாக்காளரில் 74.8 விழுக்காட்டினர் இவர்களில் 75 விழுக்காட்டிற்கு மேற்பட்டோர் முன்னெப் போதுமே வாக்களித்தது கிடையாது. எனவே கூடுதலாக வாக்குகள் பழுதாகிப் போகுமோ என்ற அச்சமும் முன்பு நிலவியது. இப்போது அதுவும் அகன்று விட்டது. எனினும் 3.5 மிலியன் வாக்களிக்க (14.1விழுக்காடு) தகுதி பெற்ற வெள்ளையரின் வாக்குகளைப் பெற்ற டி கிளார்க்கின் தேசியக்கட்சி 19 விழுக்காடு வாக்குகள் பெற்றதற்கும் குவாசுலு அடங்கிய நேட்டால், மேற்குக் கேப் ஆகிய இரண்டு மாநிலங்களும் ஏ. ஏ.என்.சி.வசம் வராதுபோக ஏனைய ஏழு மாநில ஆட்சியும் மண்டேலாவின் கையில் வந்துள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

# வேளாண் மன்னர்களுடன் ஒரு சந்திப்பு

அரச உத்தியோகத்தால் பலன் ஏதும் ஏற்படப் போவதில்லை என்பது என்மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டதால் 1983இலேயே அதனைத் தூக்கி எறிந்து விட்டு விவசாயத்தில் இறங்கினேன் என பெருமிதத்துடன் கூறுகிறார் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த 'வேளாண் மன்னர்' சண்முகம் பாலேந்திரன்.

தமிழீழ பொருண்மிய மேம்பட்டு நிறுவனம் வடதமிழீழப் பகுதியில் 1993|94 ஆம் ஆண்டுக் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளிடையே நடாத்திய 'வேளாண்மன்னர்' போட்டியில்நீர்ப்பாசனம் மற்றும் மானாவாரி செய்கையில் மாவட்ட ரீதியில் அதி கூடுதலான விளைச்சல்களைப் பெற்ற ஆறு விவசாயிகளுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் 'வேளாண் மன்னர்' பட்டமளித்து தங்கப்பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கி கௌரவித்தது தெரிந்ததே.

இவ் வைபவத்தில் கலந்து கொள்வதற்கென வந்திருந்த 'வேளாண் மன்னர்'களுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது வன்னி மாவட்டத்தில் நீர்ப்பாசனம் மூலம் அதிகூடிய விளைச்சலாக 165.7 புசல்நெலை ஏக்கருக்கு பெற்றதன் மூலம் வேளாண் மன்னர் பட்டத்தை தட்டிக் கொண்ட பாலேந்திரன் மேலும் தெரிவிக்கையில் 'நான் நம்பியமண் என்னைக் கைவிடவில்லை. நான் அரச உத்தியோகத்தைத் துறந்தபோது உறவினர்கள் உட்பட பலர் என்னை தூற்றினார்கள். எனது மைத்துனர் வெளிநாடு சென்றால் லட்சக் கணக்கில் உழைக்கலாம் எனக்கூறி கனடாவிற்கு வருமாறு அழைத்தார். மிகக் குறைந்த தொகையாக முப்பதாயிரத்துடன் போகலாம் எனக் கேட்டார். ஆனால் எனக்கோ அடுத்தவர்களுக்கு கீழ் இருந்து அடிமையாக வாழப் பிடிக்காது. அதனால் அவரது கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை.

ஆயினும் எனக்கு ஓர் திடமான நம்பிக்கையிருந்தது. விவசாயம் செய்வதன் மூலமே நான் சுதந்திரமாகவும் சிறப்பாகவும் வாழ முடியும் என்று. அதன்படி வேளாண்மை செய்யத் தொடங்கினேன். எனக்கு உதவியாக அன்றிலிருந்து எனது சகோதரரும் இருந்து வருகிறார். இருவருமாக சேர்ந்தே ஏக்கர் கணக்கில் விவசாயம்செய்கிறோம். எமது முழு நேரத்தையும விவசாயத்திலேயே ஈடுபடுத்துகிறோம்.

தற்போது இந்த விவசாயத்தால் உழைத்தே டிராக்டர், பெட்டி, கலப்பை மற்றும் பல ஏக்கர் காணிகள், வீடுகள் ஆகியன உட்பட லட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துகளுக்கு உரிமையாளராக இருக்கிறேன். ஆனால் எனது மைத்துனர் இப்பவும் கடிதம் எழுதுவார் நீ வாழ்நாள் பூராவும் மண்ணைக் கிண்டிக் கொண்டே இரு என்று. ஆனால் இன்று வரை எனது மனம் மாறியது கிடையாது. எமது நாட்டில் எல்லா வளமும் இருக்கு, காணி இருக்கு, தொழில் செய்யத் தெரியும் பிறகு ஏன் அன்னிய நாடு போவான். அங்கே போய் ஏன் அடுத்தவனுக்கு அடிமையாக வாழ்வான். இங்கு யாருக்கும் அஞ்சத் தேவையில்லை. இன்று என்னால வயலுக்கு போக முடியாவிட்டால் போகாது விட்டு விடுவேன். கட்டாயம் செய்தேயாக வேண்டியிருந்தால் கூலிக்கு ஆட்களைப் பிடித்து செய்விப்பேன். ஆனால் வெளிநாட்டிலோ அல்லது அரச உத்தியோகத்திலோ இப்படி எல்லாம் செய்ய முடியுமா? அப்படித்தான் இதில் ஏதாவது ஒன்றை செய்திருந்தால் இன்று தேசியத் தலைவரிடம் இருந்து நேரடியாக பரிசு பெறும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்குமா என்றார் அவர்.

முல்லை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டியில் நீர்ப்பாய்ச்சல் மூலம் டபிள்யூ351 இன நெல்லை விதைத்து ஆகக் கூடுதலான விளைச்சலாக176.4 புசல் நெல்லை பெற்றுக் கொண்டதன் மூலம் முல்லை மாவட்ட வேளாண் மன்னர் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட கந்தையா முத்துக்குமாரு என்ற நடுத்தர வயது விவசாயி குறிப்பிடுகையில் "இயற்கையாக எமது மண்ணில் இருக்கும் வளங்களை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் சிறந்த விளைச்சலைப் பெற முடியும் என்பதை எனக்குக்கிடைத்த இந்த வெற்றி குறித்து நிற்கிறது. யாழ்ப்பாணத்தைபோல் அல்லாது எமது மண்ணில் தேவையான அளவுநிலவளம் உண்டு பருவமழைமூலம்பெறப்படும் நீரை குளங்களில் தேக்கிவைக்கும் வசதியும் உண்டு எம்மை நாம் பூரணமாக விவசாயத்தில் அர்ப்பணிப்பதன் மூலம் நிறைவான பலனைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது எனது நம்பிக்கை.

தேவையான நோங்களில் உரிய அளவுகளில் எமது வளங்களை ஒன்றிணைத்து விவசாயத்தை ஓர் புனிதமான தொழிலாகக் கருதி செய்வோமாக இருந்தால் அது ஒருபோதும் எமக்கு நட்டத்தை தரமாட்டாது. நான் விஞ்ஞானம் படித்தவன் என்றவகையில் சில விஞ்ஞான நுட்பங்களையும் விவசாயத்தில் பயன்படுத்தி வருகிறேன்.

விவசாயிகள் தமது நேரத்தில் பெரும் பங்கை விவசாயத்தில் செலவிடாமல் வேறு வேலைகளில் கூடிய கவனம் செலுத்துவது அந்தந்த காலத்தில் போட வேண்டிய உரங்களைப் போடாமல் விட்டுவிடுவது, நல்ல முறையில் உழுது நிலத்தைப் பண்படுத்தாது அவசரப்பட்டு நெல்லை விதைப்பது அக்கறையீனமாக இருப்பது இவையே அவர்கள் சிறந்த பலனைப் பெற முடியாமல் இருப்பதற்குக் காரணம் என எண்ணுகிறேன்.

பலர் வேளாண் மன்னர் போட்டியை போட்டியாக கருதி கூடிய கவனம் செலுத்தாமையே அதி கூடுதலான விளைச்சலைப் பெறமுடியாமல் போனது என எண்ணுகிறேன். 1967 ஆம் ஆண்டு அரசாங்கம் நடாத்திய போட்டியில் எனக்கு முதலாம் பரிசு கிடைத்தது. அப்போ ஏக்கருக்கு 177 புசல் நெல் கிடைத்தது.

ஆயினும் இம்முறை எனக்கு பரிசு கிடைக்கும் என நான் நினைத்திருக்கவில்லை. ஆயினும் நல்ல முறையில் செய்தால் கூடிய பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. இன்று தமிழீழத் தேசியத் தலைவரால் எமக்கு வழங்கப்பட்ட இந்த கௌரவிப்பு தமிழீழ விவசாயிகள் அனைவருக்கும் வழங்கிய ஓர் கௌரவிப்பாகவே கருதுகிறேன்.

எமது மண்ணில் உள்ள வளங்களை நல்லமுறையில் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கி நல்ல வாழ்வு வாழ வைப்பதனை நோக்கமாகக் கொண்டே தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இந்த போட்டியை வட தமிழீழத்தில் நடாத்தியது. தற்போது கூட எமது மண்ணில் பெருமளவு வளங்கள் பயன் படுத்தப்படாத நிலையிலேயே உள்ளன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் இந்த வளங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன இந்தக் குறைந்தளவு வளங்களைக் கொண்டு பெருமளவு கஷ்டப்பட்டே இங்கு விவசாயம் செய்யப்படுவதை அவதானித்தேன். இந்த பிரயாசையை யாழ்ப்பாண விவசாயிகள் எமது மண்ணில் பயன்படுத்துவார்களாக இருந்தால் பல மடங்கான பயன்பாட்டைப் பெற்றுக் கொள்வார்கள் என்பதில் எதுவித ஐயுறவுமில்லை. இவர்கள் எமது மண்ணின் வளங்களை பயன்படுத்தி நாட்டையும் செழிக்க வைத்து தமது குடும்பங்களையும் சிறப்புற வாழ வழி சமைக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும் என்றார்.

விவசாயம் எமது பரம்பரைத் தொழில் என்பதாலும் சிறுவயதிலிருந்தே அதில் ஈடுபாடு இருந்து வருவதாலும் விரும்பியே விவசாயத்தை செய்து வருகிறேன் எனக் கூறுகிறார் மன்னார் மாவட்ட வேளாண் மன்னராக தெரிவு செய்யப்பட்ட யோசேப் சகாயராசா பெரேரா என்ற விவசாயி. முருங்கன் பகுதியில் நிலம் களித்தன்மையாக இருப்பதால் அதில் நன்கு விளைவிக்கக் கூடிய பி. ஜி.11.11என்றஇன நெல்லினைத் தான் தெரிவு செய்ததாகக் கூறும் இவருக்கு ஏக்கருக்கு 188 புசல் நெல் விளைச்சல் கிடைத்துள்ளது.

செயற்கை உரங்களைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதால் நிலம் கெட்டு விடும் என்பதால் இயற்கை உரங்களையே மிகக் கூடுதலாகப் பயன்படுத்தி வருகிறேன்.

எமது விவசாய உற்பத்திக்கு உறுதுணையாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். கெயர் போன்ற ஸ்தாபனங்களும் செயற்பட்டு வருகின்றன. இவை எமக்கு காலத்திற்குக் காலம் வேளாண்மை தொடர்பான ஆலோசனைகளை வழங்கி வருகின்றன. இவை எமக்கு மிகவும் பயனுடையதாக இருக்கிறது.

இவர்கள் எமக்கு தேவையான விதை நெல் உரவகைகள். கிருமி நாசினிகள் போன்றவற்றை காலத்திற்குக் காலம் வழங்கி வருகின்றனர். இவர்களின் உதவி கிடைப்பதால் உற்சாகத்துடன் விவசாயத்தில் ஈடுபடக் கூடியதாகவுள்ளது என்றார்.

தேசியத் தலைவரிடம் இருந்துபரிசுபெறுவது எனக்கு கிடைத்த ஓர் வரப்பிரசாதம் என்றே கூற விரும்புகிறேன் என்றார்,

மானாவாரி நெற்செய்கை மூலம் முல்லை மாவட்டத்தில் 500-1 இன நெல்லை உற்பத்தி செய்து அதிகூடுதலான விளைச்சலாக 105 புசலை அறுவடை செய்ததன் மூலம் வேளாண்மன்னராக தெரிவு செய்யப்பட்டவேலுப்பிள்ளை சிவபாதம் என்பவர் தெரிவிக்கையில் "பூமி என்பது ஓர் பெட்டகம் போன்றது அதற்குள் தேவையான அனைத்தும் உண்டு. அதன் திறப்புத்தான் எமது முயற்சி. திறப்பால் நாம் அந்த பெட்டகத்தைதிறக்காதிருக்கும் வரைக்கும்அதற்குள் இருக்கும் எந்தஒன்றையும் அனுபவிக்க முடியாது. எமதுமண் அனைத்து வளங்களும் நிறைந்ததொன்று அந்த வளங்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி பயன்படுத்துவதில்எம்மில் பலர்அக்கறைகாட்டுவதில்லை. இதனாலேயே தான் நாம் இன்றும் சிங்கள அரசிடம் கையேந்தி அவர்களையே நம்பி வாழ வேண்டியவர்களாக உள்ளோம்.

கூடுதலான நேரத்தை நல்ல முறையில் வயலில் செலவிடுவதை விரும்புகிறேன். வயலில் பகலில் நடமாடும் எந்தவொரு பூச்சிகளாலும் எமக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது. இரவில் ஊசலாடும் பூச்சிகளால் முழுக்க முழுக்க அழிவுகள் தான் ஏற்படும். இரவில் வரும் பூச்சிகளுக்காக பகலில் மருந்து அடிப்போம். அதனால் பகலில் வரும் நன்மையான பூச்சிகளே இறக்கின்றன. இரவுப் பூச்சிகள் தப்பித்து மரங்களுக்குள் பதுங்கி விடுகின்றன. இவற்றுக்கு மருந்துகள் தெளிப்பதாலோ அல்லது பயிர்களுக்கு மருந்துகள் அடிப்பதாலோ எமக்குத்தான் அழிவு ஏற்படும். பயிர்களுக்கு பயன்படுத்தும் மருந்துகள் எதிர் காலத்தில் எம்மையே நோயாளிகளாக்கி விடும் என்பதால் நான் இவற்றைப் பெருமளவில் தவிர்க்கவே முயற்சிக்கின்றேன்.

இரவு பூச்சிகளை அழிப்பதற் வரம்புகளில் நெருப்புகளை கொளுத்திவிடுவேன் இவைபறந்து வந்து நெருப்பில் விழுந்து இறந்து போகும் இல்லையேல் இவை முட்டையிட்டு 15 நாட்களுக்குள் அவை பொரித்து பன்மடங்காக அதிகரித்து பயிர்களை அழித்துவிடும் என்றவர் தலைவரிடம் பெற்ற பரிசு பற்றிக் குறிப்பிடுகையில், தலைவரிடமிருந்து நான் பெற்ற பரிசை எதிர்காலத்தில் மற்றவர்களும் பெற வேண்டும் என விரும்புகிறேன் என்றார்.

யாழ் மாவட்ட 'வேளாண் மன்னராக' தெரிவு செய்யப்பட்ட இளம் விவசாயியான கதிரவேலு சற்குணராசா தெரிவிக்கையில் 'யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் ஏனைய மாவட்டங்களைப்போல் விவசாயம் செய்ய முடியாது. இங்கு மழையை நம்பியே செய்ய வேண்டியுள்ளது. விதைநெல் முதல் பயன்படுத்தப்படும் உரம் வரையில் எமக்குப்பெற்றுக் கொள்ள முடியாததாகவேயுள்ளது. பலத்த சிரமங்களுக்கும் மத்தியில் தளராத மனத்துடன் போட்டியில் கலந்து கொண்டேன்.

இதனை ஓர் சவாலாக எடுத்தே நெல்லை விதைத்தேன். குடும்பநிலைமை காரணமாக பகலில் தனியார் நிறுவனத்திலும் இரவில் காவலர் வேலைக்கும் செல்கிறேன். அதனுடன் சேர்த்தே விவசாயத்திலும் ஈடுபட்டேன். இதற்கு இதுதான் நேரம் என்பது இல்லாததால் எனக்குவசதியான நேரத்தில் விவசாயத்தை கவனித்தேன். எனக்கு முன் அனுபவம் குறைவாக இருந்த போதிலும் அனுபவமுள்ள விவசாயிகளிடம் தேவையான ஆலோசனைகளைப் பெற்றேன். இம்முறை பி.ஜி. 350 ரக நெல்லினை விதைத்தேன். இங்கு ஏக்கர் கணக்கில் காணி கிடையாது. அதனால் ஏழு பரப்பில் விதைத்தேன். எனக்கு 105 புசல் நெல் விளைந்தது. இங்கு சந்தைப்படுத்துவதில் சிரமங்கள் இல்லை. ஆனால் நான் சந்தைப்படுத்துவதற்காக நெல் விதைப்பது கிடையாது. எமது வீட்டுத்தேவைக்குத்தான். அதுபோதுமானதாக இருக்கும். நெல் வீட்டில் இருந்தாலே ஒரு இலட்சுமி கரமானதாக இருக்கும். பார்க்கும்போதெல்லாம் நான் கஷ்டப்பட்டுசெய்துஎடுத்த நெல் என்ற பூரிப்பு ஏற்படும்.

இங்கு நீர் எலி (அழான்) யினால்தான் தொல்லை. அதற்கு வாழைத்தண்டை வெட்டி நீருக்குள் போட்டு விடுவேன். அது பாம்பு என நினைத்து தரை விட்டு வெளியிலேயே வரமாட்டாது. தேசியத் தலைவரிடமிருந்து நேரடியாக விருது பெற்றதானது வாழ்நாளில் கிடைக்கும் என்றே நான் எண்ணியிராத ஓர் பெரும்பேறு என்றே கருதுகிறேன். எப்பவும் எளிதில் மறக்க முடியாத ஓர் இனிய நிகழ்வாகவே கருதுகிறேன் என்றார் மட்டில்லா மகிழ்வுடன்.

மானாவாரிநெற்செய்கையில் ஈடுபடும் முல்லை மாவட்ட வேளாண் மன்னரான வேலுப்பிள்ளை சிவபாதம் என்பவர் தெரிவிக்கையில் பல வருடங்களாக விவசாயம்செய்து களைத்து விட்டேன். போதிய வருமானம் தராததால் விவசாயமே வெறுத்திருந்தது.

பின் பலரது ஆலோசனைகளையும் கேட்டேன். அவர்கள் கூறியபடி எனது காணியை விற்றுவிட்டு வேறோர் இடத்தில் புதிய காணியை வாங்கி நெற்செய்கையில் ஈடுபட்டேன். எனது தாய்தந்தையர் விவசாயிகளாக இருந்த போதிலும் அவர்களிடம் அனுபவத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய பாக்கியம் எனக்குக் கிட்டவில்லை அதனால் சிறு வயது முதலே மற்றவர்களுடன் வயலுக்குச் சென்று அவர்களது வயலில் நானும் வேலை செய்வேன். பலருடன் செல்வதால் பல்வேறுபட்ட அனுபவங்களையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. அதனையே இன்றுஎனது வயலில் பிரயோகிக்கின்றேன் இம்முறை நீரைதேக்கிவைக்க வேண்டும் என்பதற்காக பாத்திகள் அமைத்து நெல் விதைத்தேன். அதனால் தான் இம்முறை எனக்கு தலைவரின் கையால் பரிசு பெறும் வாய்ப்பு கிடைத்தது. இதை எனக்கு ஒரு ஊக்கியாகக் கொண்டு எதிர்காலத்தில் மேலும் விளைச்சலை பெற முயற்சிப்பேன் என்றார்,

இந்த மண்ணின் விடுதலைக்காக மாபெரும் விடுதலைப் போரை நடாத்திக் கொண்டிருக்கும் எமது தலைவர், மண்ணில் உற்பத்தியை பெருக்கி பொருளாதாரத்தை கட்டியமைப்பதிலும் உறுதியாகவே இருக்கிறார் . . .

தலைவர் அவர்களால் எமக்கு வழங்கப்பட்ட பரிசு இதைத்தான் வெளிப்படுத்துகிறது. தலைவரின் கௌரவிப்பு, எதிர் காலத்தில் எம்மைப் போல பலரும் உற்பத்தியில் ஊக்கமாகச் செயலபட உதவும் என நம்புகிறோம்.

**பேட்டி கண்டவர்: சசிகரன்**

Branch Library

# சிறுகதை

# அரசனின் வருகை

## உமா வரதராஜன்

> மட்டக்களப்பைச் சேர்ந்த உமா வரதராஜன், கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் சிறிலங்கா இராணுவத்தின் கொடூரங்களை மையமாக வைத்து எழுதியகதை இது.

புடுண்ட அந்த நகரத்துக்கு அரசன் வரும் நாள் அண்மித்துக்கொண்டிருந்தது. யுத்தத்தில். இடிந்துபோன கோவிலைக் கட்டும் பணிகளை ஆரம்பித்து வைக்கஅவன் வருவதாகச் சொன்னார்கள். அரசனின் வருகை பற்றிய அறிவிப்புக்களை உடம்பில் ஒட்டிக் கொண்டு எருமைகள் எல்லாம் நகரத்து வீதிகளில் அலைந்து திரிந்தன. முரசுகள் சந்து பொந்துகளெங்கும் சென்று அதிர்ந்தன.

ரத்த ஆற்றின் கரையில் அந்த நகரம் இருந்தது. சிறு காற்றுக்கு உரசி, தீப்பற்றி எங்கும் மூளும் மூங்கில்கள் நிறைந்தநகரம் அது. கடைசி யுத்தம் மூன்று வருஷங்களின் முன்னால் நடந்தது. யானைகளின் பிளிறல், குதிரைகளின் கனைப்பு, வாட்கள் ஒன்றொடொன்றுஉரசுமொலி மனிதர்களின் அவலக் குரல் எல்லாம் இன்றைக்கும் செவிகளில் குடியிருந்தன. அப்போதைய பிணங்களின் எரிந்த வாடை இன்னமும் அகலாமல் நகரத்தின் வானத்தில் தேங்கிப்போய் நின்றது. அண்மைக்காடுகளை உதறிவிட்டுப் பிணந்தின்பதற்காக இங்கேவந்த பட்சிகள் யாவும் நகரத்தின் பெரிய விருட்சங்களில்தங்கி இன்னொருதருணத்திற்காகஏங்கிக் கொண்டிருந்தன. கூரையிழந்தவீடுகள் கரிபடிந்தசுவர்கள் அந்நகர் தன் அழகு முகத்தின் மூக்கை இழந்த விதம் சொல்லும். ஆந்தைகளின் இடைவிடாத அலறல்களுடனும், நாய்களின் அவ்வப்போதைய ஊளைகளுடனும் நகரத்தின் இரவுகள் கழிகின்றன. முகிலுக்குள் பதுங்கிக் கொண்ட நிலவு வெளியே வருவதில்லை. பால் கேட்டுக் குழந்தைகள் அழவில்லை. நடு இரவில் குதிரைகளின் குளம்பொலிகளும் சிப்பாய்களின் சிரிப்பொலிகளும் கேட்கும். நெஞ்சறை காய்ந்து, செவிகள் நீண்டு, கூரையில் கண்களைப் புதைத்து பாயில் கிடப்பான்ஊமையன்.

ஊமையனும் இன்னும் சிலரும் அந்த நகரத்தில் எஞ்சியிருந்தனர். உயிர் தப்பியசிலரும், உயிர் தப்ப பலரும் ஆற்றைக் கடந்து வேறு பகுதிகளுக்குச் சென்றார்கள். கரையில் நின்று கையசைத்த பெண்களின் கண்களில் துளிர்த்த நீரில் அந்தப் படகுகள் மறைந்து போயின, ஊமையனுக்கு அம்மாவை விட்டுப் போக மனமில்லை.

ஊமையனின் உண்மையான பெயர்பலருக்கு மறந்து போய்விட்டது. அதிகம்எதுவும் பேசாததால் அவனுக்கு அந்தப் பெயர்வந்தது. அவன் பேச்சு எவ்வளவும் மெல்ல மெல்லக் குறைந்தது என்பது பற்றி அம்மா அறிவாள்.

கலகக்காரர்களை ஒடுக்க இந்த நகரத்துக்கு அரசன் அனுப்பியபடையுடன் கூடவே ஆயிரமாயிரம் பிணந்தின்னிக் கழுகுகளும் தம் சிறகுகளால் சூரியனைமறைத்தபடி இங்கே நுழைந்தன. கோயிலின் சிலை பெண்களின் முலை, குழந்தைகளின் தலை என்ற வெறியாட்டம் மத யானைகள் துவம்சம் செய்த கரும்புத் தோட்டமாயிற்று அந்நாட்களில் இந்த நகரம்.

ஊமையனும் ஒருநாள் பிடிபட்டவன்தான். முகத்து மயிரை மழிக்க அவன் வைத்திருந்த சவரக்கத்தி கூட ஓர் ஆயுதம் எனக் குற்றஞ்சாட்டி அவனுடைய கைகளைப் பின்புறம் கட்டி, பாதணிகள்இல்லாத அவனை கொதி மணலில் அழைத்துச் சென்றனர். நடு வெயிலில், நடுத்தெருவில் முழங்காலில் நிற்க வைத்து சூரிய நமஸ்காரம் பண்ணச் சொன்னார்கள். வாயில் கல்லைத் திணித்து, வயிற்றில் குத்தினார்கள். அம்மா' என்ற அவனுடைய சத்தம் கல்லைத் தாண்டி வெளியே வரவில்லை.

மாலையில் வெறிச்சோடிய தெருவழியாக தளர்ந்த நடையும், வெளிறிய முகமுமாக ஊமையனும் இன்னும் சிலரும் நகரத்துக்குத் திரும்பி வந்தனர். மரணத்தின் தூதுவன் மறுபடியும் கை தட்டிக் கூப்பிடுவான் என்ற அச்சத்தில் திரும்பிப் பாராமல் நிழல்கள் இழுபடத் தள்ளாடித் தள்ளாடி அவர்கள் வந்தனர். தெருமுனையில் அவர்கள் தோன்றியதும் பெண்கள் ஓட்டமும் நடையுமாக அவர்களிடம் வந்தனர். ஓடி ஓடி ஒவ்வொரு முகமாகத் தேடி அலைந்தனர். வராத முகங்கள் தந்த பதற்றத்தில் நடுங்கினார்கள். ஒப்பாரி வைத்து அழுதார்கள், 'என்ன நடந்தது என்ன நடந்தது' என்று ஓலமிட்டார்கள். தனதப்பன் போய்ச் சேர்ந்து விட்டான் என்ற சேதி தெரியாமல்ஒருத்தியின் இடுப்பிலிருந்த குழந்தை விரல் சூப்பிச் சிரிக்கின்றது. 'என்னநடந்தது என்ன நடந்தது' என்று இன்னொருத்தி ஊமையனின் தோளைப் போட்டு உலுக்கி ஒப்பாரி வைக்கின்றாள். பேய்க் காற்றின் உரசலில் கன்னியர்மாடத்தின் சவுக்கு மரங்கள் இன்னும் துயரத்தின் பாடல்களைப் பரப்புகின்றன.

வாழ்வதற்கான வரமும் அதிர்ஷ்டமும் தனக்கிருப்பதாக எண்ணி ஒரு சிறுகணம் உள்ளம் துள்ளிய சிறுபிள்ளைத் தனத்துக்காக வெட்கப்பட்ட ஊமையன் தன் தலை மேல் கத்தி தொங்கும் வாழ்க்கை விதிக்கப்பட்டிருப்பதை மெல்ல உணர்ந்தான். மௌனத்தில் அவன் காலம் நகர்ந்தது. வீட்டுக்குள்முடங்கியஅவனை நான்கு சுவர்களும் நெரித்தன. வீட்டின் கூரை பல சமயங்களில் நெஞ்சில் இறங்கிற்று. ஒளியைத் தவறவிட்ட தாவரம் போல ஊமையன் வெளிறிப் போயிருந்தான். தேவாங்கின் மிரட்சியுடன் தடுமாறிக் கொண்டிருந்தான்.

பகலிலும் இரவிலும் கனவுகளில் அலைந்தான். கண்கள் தோண்டப்பட்ட, நகங்கள் பிடுங்கப்பட்ட மனிதர்கள் எங்களுக்கோர் நீதி சொல்' என்று தள்ளாடித் தள்ளாடி அங்கே வந்தனர். அரைகுறையாக எரிந்த தெருச் சடலங்கள் வளைந்தெழுந்து 'நாங்கள் என்ன செய்தோம்' என்று முனகின. நீர் அள்ள உள்ளே இறங்கிய வாளியைக்கிணற்றில் கிடந்த பிணங்களின் கையொன்று மெல்லப் பற்றிக்கொண்டது. கழுத்தை இழந்த கோழியொன்று துடிதுடித்து, உயிரைததேடி அங்குமிங்கும் அலைந்து மண்ணில் சாயும். குட்டித் தாய்ச்சி ஆட்டின் வயிறு மீது குதிரை வண்டிச் சக்கரங்கள் ஏறிச் செல்லும் மயிர் உதிர்ந்த தெரு நாய்களின் வாய்கள் மனிதர்களின் கையையோ காலையோ கவ்வி இருக்கும்.

ஊமையனின் கனவில் அரசனும் வந்திருக்கின்றான். சாந்த சொரூபனாய், கடைவாய் கெழிந்த புன்னகையுடன் அந்தக் கனவில் அவன் வந்தான். கடைவாய் கெழிந்த இந்தப் புன்னகைக்குப் பின்னால் முதலைகள் நிறைந்த அகழியும், நச்சுப்பாம்புகள் பதுங்கிக் கொண்ட புற்றொன்றும் விஷ விருட்சங்களைக் கொண்ட வனாந்தரமும் ஒளிந்திருப்பதாகப் பலர் பேசிக்கொண்டனர். இதைப் போல் அரசனைப் பற்றிப் பல கதைகள். வெண்புறாக்களை வளர்ப்பதில் அவன் பிரியம் கொண்டவன் என்றும், மண்டையோடுகளை மாலையாக்கி அணிவதில் மோகமுள்ளவன் என்றும் ஒன்றுக்கொன்று முரணான கதைகள். பல நூற்றாண்டுகள் மண்ணுக்குள் யாத்திரை செய்து புதையுண்டு கிடந்த தன் முன்னோரின் கிரீடத்தைக் கண்டெடுத்துத் தலையில் சூடிக்கொண்டான் அவன் எனவும், செல்லுமிடமெல்லாம் சிம்மாசனத்தையும் கொண்டு திரிந்தான் என்றும் காற்றில் வந்தன பல கதைகள்.

> அரசனைப்பற்றிப் பல கதைகள். . . .
> வெண்புறாக்களை வளர்ப்பதில்
> அவன் பிரியம் கொண்டவன் என்றும்,
> மண்டையோடுகளை மாலையாக்கி
> அணிவதில் மோகமுள்ளவன் என்றும்
> ஒன்றுக்கொன்று முரணான கதைகள்.
> பலநூற்றாண்டுகள் மண்ணுக்குள்
> யாத்திரை செய்து புதையுண்டு கிடந்த
> தன் முன்னோரின் கிரீடத்தைக்
> கண்டெடுத்துத் தலையில் சூடிக்
> கொண்டான் அவன் எனவும்
> செல்லுமிடமெல்லாம் சிம்மாசனத்தையும்
> கொண்டு திரிந்தான் என்றும்
> காற்றில் வந்தன பல கதைகள்

அரசவை ஓவியர்கள் வெகு சிரத்தையுடன் உருவாக்கியிருந்த அந்தப் புன்னகை சிந்தும் முகத்துடனேயேதான் ஊமையனின் கனவிலும் அரசன் வந்தான். கோவில்மணி விட்டு விட்டொலிக்கின்றது. பாட்டம் பாட்டமாக வானத்தில்பறவைகள்அலைகின்றன. வேதம் ஓதுகின்றனர் முனிவர்கள். அது ஒரு நதிக்கரையோரம். பனி அகலாத புல்வெளியில் அரசன் வெண்ணிற ஆடைகளுடன் தன் கையிலிருந்த வெண்புறாவைத் தடவியபடி நடந்து கொண்டிருந்தான். அவன் பின்னால் ஊமையன். அரசனின் சௌந்தர்யத்தைக் கண்டு சூரியன் சற்றுத் தயங்கித் தடுமாறி வந்த ஓர் இளங்காலை.

அரசன் அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்தான்.

''மேகங்கள் அகன்றுகொண்டிருக்கின்றன. இன்னும் கொஞ்சகாலம். வெளிச்சம் வந்து விடும்...''

அரசனின் குதூகலமான மனநிலை ஊமையனுக்கு ஓரளவு தைரியத்தைத் தந்தது.

''அரசே, வெளிச்சம் வருவதற்குள் நாங்கள்இறந்துவிடமாட்டோமா இப்போதும் என்ன, நாங்கள் நடைபிணங்கள் அல்லவா...?''

ஊமையனைத் திரும்பிப் பார்த்து அரசன் சிரித்தான்.

''போர் என்றால் போர்... சமாதானம் என்றால் சமாதானம்...''

ஊமையன் வார்த்தைகளை மென்று விழுங்கிச் சொன்னான்.

''போர்என்றால் ஒரு தர்மமில்லையா அரசே? குடிமக்கள் செய்த பாவம் என்ன? சிசுக்கள், நோயாளிகள், முனிவர்கள், பெண்கள் இவர்களைக் கொல்வது யுத்த தர்மமா?''

அரசன் புன்னகைத்தான்.

''தேர் ஒன்று நகரும்போது புற்கள் புழுக்கள் பற்றி முனகுகின்றாய் நீ எனக்குத் தெரியும் எல்லாம் தெரியும்..''

''நீங்கள் மனது வைத்தால் எதுவும் முடியும்'' என்றான் ஊமையன். அரசனின் நடை திடீரென்று நின்றது.

''ஆம் நான் நினைத்தால் எதுவும் சாத்தியம் இதோ பார்!'' என்றான் அவன். அரசனின் கையிலிருந்தவெண்புறா சட்டென்று மாயமாக மறைய, முயலின் அறுபட்ட தலை ரத்தத்தில் தோய்ந்து அங்கேயிருந்தது.

அரசனின் வருகை நெருங்க நகரம் அமர்க்களப்பட்டது. காவல் பரண்கள் புதிது புதிதாய் முளைத்தன. இரவு பகலாய் வேலைகள் நடந்தன. சவக்கிடங்குகளின் முன்னால் பூச்செடிகள் நட்டு நீருற்றினார்கள். இலையுதிர் காலம் நிரந்தரமாகி விட்ட இந்த நகரத்தின் வயில்களில் வேற்றூர்களிலிருந்து மரங்களை வேர்களுடன் பெயர்த்துக் கொணர்ந்து நட்டார்கள். நூறுவருஷத் தொடர் மழையாலும் கழுவ முடியாத ரத்தக்கறை கொண்ட மதில்களுக்குப் புதுவர்ணம்பூசினார்கள். புன்னகை சிந்தும் அரசனின் ஓவியங்கள் சுவரெங்கும்நிறைந்தன.

சோதனைச் சாவடிகளில் மாட்டு வண்டிகள் நீளத்துக்கு நின்றன. கொட்டும்மழையில் ஆடைகள் நனையபொதிகளைத் தூக்கித் தலையில் வைத்தபடி மௌனமாக ஊர்ந்தனர் ஜனங்கள். நாக்குகளை நீட்டச் சொல்லி அங்கே புதைந்திருக்கக் கூடிய அரச விரோத சொற்களை அவர்கள் தேடிப்பார்த்தனர். நகரத்துக்கு வேளை தெரியாமல் வந்த பசுவொன்றின் வயிற்றைக் கீறி அதன் பெருங்குடலை ஆராய்ந்து பார்த்தனர். எருமையின்குதத்தினுள் கைவிட்டு ஏதேனும் கிடைக்குமா என்று துழாவினார்கள்.

மீசை நுரை அகலாத கள்ளுக்குடியர்கள் தப்பட்டம் அடித்து வீதிகளில் ஆட்டம் போட்டனர்.

''கோயில் தந்தான்எங்கள் மன்னன் கோயில் தந்தான் இன்னுந் தருவான் கேட்கும் எல்லாம் தருவான் தில்லாலங்கடி... தில்லா...''

திண்ணையிலிருந்த ஊமையனின் தாத்தா வெற்றிலை இடிப்பதை நிறுத்தி விட்டு பாட்டு வந்த திக்கைப் பார்த்தார். பார்வை தெரியாத அவருக்கு ஓசைகளே உலகம். கள்ளுக்குடியனின் பாடல் தாத்தாவுக்குக் கோபத்தைத் தந்திருக்க வேண்டும். கையுரலில் இருந்த வெற்றிலையை வேகமாக இடித்தவாறிருந்தார்.

''கோவிலைத் தருபவனுக்கு மறுபடி இடிக்க எவ்வளவு நேரமாகும்'' என்று முனகிக் கொண்ட தாத்தா மேலே எதுவும் பேச விரும்பாமல் வெற்றிலையை வாய்க்குள் போட்டுக் கொதுப்பிக் கொண்டார்.

அரசன் வருவதற்கு ஒரு தினம் இடையிலிருந்தது. ண்ணயர்ந்து கொண்டிருந்த தாத்தா குதிரைகளின் கனைப்பொலியால் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார். வீட்டு வாசல்களுக்கு வந்த பெண்கள் வெளியே எட்டிப் பார்த்து விட்டு மறைந்தனர். பதற்றததுடன் வந்த அம்மாவை ஊமையன்வெறித்துப் பார்த்தான். அம்மாவின் உதடுகள் உலர்ந்து, விழிகள் வெகுண்டிருந்தன. வானத்தை அண்ணாந்து பார்த்து இரு கைகளாலும் கும்பிட்டாள்.

வழக்கம் போல் எல்லாம் நிகழ்ந்தன. அந்தக் குடியிருப்பின்ஒவ்வொருவீட்டினுள்ளும் சிப்பாய்கள் நுழைந்து, டறப்பட்டனர். ஊமையனை அவர்கள் கூட்டிச் சென்றபோது அம்மா என்னென்னவோ சொல்லி அழுது பார்த்தாள். மனித பாஷை புரிந்த குதிரைகள் மாத்திரம் தலைகளை அசத்துக் கனைத்துக் கொண்டன. சிப்பாய்களை நோக்கிக் குரைத்தவாறு, ஊமையனின் கால்களை மறித்தபடி தெருமுனை வரை வந்தது அவனுடைய நாய். சிப்பாய்கள் அதைஎட்டி

(8 ஆம் பக்கம் பார்க்க

# அரசனின் வருகை

உதைத்து விரட்டினார்கள். பிடிபட்ட ஆண்களின் பின்னால் பெண்கள் தங்கள் வாய்களிலும், வயிறுகளிலும் அடித்துக் கொண்டு பெருங்குரலில் ஒப்பாரி வைத்துத் தொடர்ந்து சென்றனர். குதிரை வீரர்கள அவர்கள் பக்கமாக ஈட்டிகளை ஓங்கி, அச்சம் காட்டி விரட்டினார்கள். குதிரைகள் கிளப்பிய புழுதிப் படலத்தினூடாக தங்கள் ஆண்பிள்ளைகள் சென்று மறைவதை தெருமுனையில் செய்வதறியாது நின்றுவிட்ட பெண்கள் கண்டனர். சுவரில் முதுகை முட்டுக் கொடுத்தபடி நின்ற தாத்தா அங்கு நின்றவர்களுக்குஆறுதல்தரும் விதத்தில் சொன்னார். ''ஒன்றும் ஆகாது நாளைக்கு அரசன் வருகிறான் அல்லவா? அதற்கு ஆள் சேர்க்கிறார்கள்'' சுவரிலிருந்த பல்லியொன்று அவ்வேளை பார்த்து சத்தமிட்டது. தாத்தாவுக்கு மிகுந்த சந்தோசத்தைத்தந்தது.

பிடிபட்ட அனைவரும் நகரத்து சத்திரங்களில் அடைக்கப்பட்டனர். இவர்களைப் போன்றே சுற்றியுள்ள ஊர்களிலிருந்தெல்லாம் கொண்டுவரப்பட்டவர்களால் சத்திரங்கள் நிரம்பி வழிந்தன. ஒருவரோடொருவர் பேசாமல் தங்கள் தலைவிதியை எண்ணி நொந்தவர்களாக அங்கு எல்லோருமிருந்தார்கள். சிப்பாய்களின் சிரிப்பொலி அவ்வப்போது பழுக்கக் காய்ச்சிய இரும்பாக இவர்களின் காதுகளில் இறங்கிற்று

ஊமையன் அந்தக் குளிர்ந்த சுவரில் சாய்ந்து, கண்களை மூடிக் கொண்டான் இருள் நிறைந்த பலிபீடத்தில் வெட்டரிவாள் ஒன்று பளிச்சிட்டுக்கொண்டிருந்தது காதுகளில் ஊளையிடும் காற்றில் சுருக்குக் கயிறொன்று அங்குமிங்குமாக அசைந்து ஊஞ்சலாடுகின்றது. கழுத்துவரை மண்ணில் புதையுண்ட அவனை நோக்கி யானையின் தடித்த பாதங்கள் முன்னேறி வருகின்றன. அவனுடைய நிர்வாண உடம்பில் புதிதுபுதிதாய் ரத்த வரிகளை எழுதுகின்றன சாட்டைகள்.

கனவுமற்ற நினைவுமற்ற இரண்டுங்கெட்டான் பெருவெளியில் அவனுடைய வீடு வந்தது. கூட்டிப் பெருக்காத வாசலில் வாடிய பூக்களும், சருகுகளும் கிடக்கின்றன. உற்சாகமிழந்த நாய் வாசற்படியை மறித்துப் படுத்திருக்கின்றது. சாம்பல் அள்ளாத அடுப்படியில் சோம்பல்பூனை சமையலறையில் குளிர்ந்து போயிருக்கும் பாத்திரங்கள். ஒரு கருநிற வண்டைப் போல சுவர்களிலே முட்டி மோதித் திரிவார் தூக்கம் வராத தாத்தா. உண்ணாமல், உறங்காமல் கண்களின் ஈரம் காயாமல் அம்மா சுருண்டு கிடப்பாள்.

நிமிஷங்களைப் பெரும் பாறைகளாய் தன் தலையில் சுமந்து இருட்டினில் அலைந்தான் ஊமையன். சத்திரத்துக் கதவு திறபட்டதும் உள்ளே புகும் காற்றுக்காகவும் வெளிச்சத்துக்காகவும் அவன் காத்துக் கிடந்தான். விடிந்தது. வெளிச்சத்தை முந்திக் கொண்டு கதவு வழியாக சிப்பாய்களின் தலைவன் உள்ளே நுழைந்தான். ''ஏய் எழும்புங்கள்... எழும்புங்கள்.'' என்று அதட்டினான்.

அவர்களை ஏற்றிக்கொண்டுநகரத்துவீதிகளில்மாட்டு வண்டிகள் விரைந்து சென்றன. மாட்டு வண்டிகளின் தொடர்ச்சியான ஜல் ஜல் சத்தத்தைக் கேட்டு அங்காடிகளைத் திறந்து கொண்டிருந்த வணிகர்கள் அப்படியே நின்றார்கள். எண்ணெய் வழியும் முகங்களுடன், தூக்கம் நிறைந்த கண்களுடன், வாரப்படாத தலைகளுடன், பசி கொண்ட வயிறுகளுடன் உலகத்தின் மிகக் கேவலமான விலங்குகளைப்பேல் இப்படிப் போவது ஊமையனுக்கு பெரும் வெட்கத்தைத் தந்தது.

இடியுண்டகோயிலின் அருகிலிருந்த குளக்கரையில் அனைவரும் இறக்கப்பட்டனர். சிப்பாய்களினால் வரிசையாக அமர்த்தப்பட்டனர்.

வானம் இருண்டிருந்தது. மழையையும்அரசன்கையோடு கூட்டி வந்துவிட்டதாக சிப்பாய்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

'ராஜாதி ராஜராஜமார்த் தாண்டராஜகம்பீர' என்று ஒரு குரல். திடீரென வாத்தியங்கள் முழங்கின. மகுடி வாத்திய விற்பன்னர்கள் நகரத்துசிறுமிகளை பாம்பாட்டம் ஆட்டுவித்தார்கள். கள்ளுக்குடியர்கள் குஸ்தியடித்தவாறு வந்தனர். பின்னால் அரசன் வந்துகொண்டிருந்தான். அவன் வருகின்ற வழியெல்லாம் மலர் தூவினார்கள். முனிவர்கள் எழுந்து வணக்கம் சொன்னார்கள்

உயரமானதோர் இடத்தில் அமைக்கப்பட்டிருந்தபந்தலை அடைந்த அரசன் அனைவருக்கும் கையசைத்தான். தொண்டை பெருத்த கவிஞர்கள்அந்தக்குளிர்வேளையிலும் பனையோலைச் சுவடிகளால் அரசனுக்கு சாமரம் வீசினார்கள். ஒரு பக்க மீசையை மழித்துக் கொண்ட எடுபிடிகள் அரசனின் பின்புறமாக உட்கார்ந்து, அவனுக்கு அரிப்பெடுக்கையில் முதுகை சொறிந்து கொடுத்தனர்.

ஊமையன் அண்ணார்ந்து பார்த்தான். கறுப்பு ஆடையைக் கழற்றி வீசி, அம்மணங் கொள்ளத் துடித்துக் கொண்டிருந்தது வானம். வானத்துப் பறவையொன்றின் எச்சம் போல ஒரு சொட்டுஊமையனின்முகத்தில்முதலில் விழுந்தது. பின்னர் வேகமான பல சொட்டுக்கள், இரைச்சல் காற்றுதிசை காட்ட மழை தொடுக்கும் யுத்தம்.

பலத்த மழையின் நடுவே அரசன் பேச எழுந்தான். கொட்டுகின்ற மழையிலும் அசையாமலிருக்கும் மக்கள் அவனுக்கு வியப்பளித்திருக்க வேண்டும்.

''என் உயிரிலும் மேலான மக்களே...''

மழையோசையை வெல்ல முயலும் அரசனின் குரல் குலைதள்ளிய வாழைகளாலும். குருத்தோலைகளாலும் செந்நிறப் பூக்களாலும் அலங்கரிக்கப்பட்ட பந்தலின் கீழ் நின்று மழையில் நனையாத அரசனின் குரல். ஊமையன் குளிரால் நடுங்கிக் கொண்டிருந்தான். பேய் பிடித்த பெண்ணாக வாயிலும் வயிற்றிலும், முதுகிலும் முகத்திலும் மாறி மாறி அறைகின்ற மழை.

''இடியுண்ட கோவிலைப் புதுப்பிக்க இன்றைக்கு வந்திருக்கின்றேன். இன்னும் என்னென்ன வேண்டும் சொல்லுங்கள்''

காற்றும் மழையும் பதில் குரல் எழுப்பின. சிப்பாய்களின் ஈட்டி முனைகளுக்கும் உருட்டும் விழிகளுக்கும் பயந்து, அசையாமல் மௌனமாயிருந்தனர் ஜனங்கள்.

''கொட்டுகின்ற மழையிலும் என்னைப் பார்க்க இவ்விதம் கூடியிருப்பது என்னை உணர்ச்சி கொள்ளச் செய்கின்றது. உங்களுக்கு என்ன வேண்டும். கேளுங்கள்.''

ஊமையன் மீண்டும் அண்ணாந்து பார்க்கின்றான். வருண பகவான் பற்களை நறநறவென்று கடிக்கின்றான். நீரேணி வழியாக இறங்கும் அவன் கைகளில் மின்னல் சாட்டைகள். சுழித்துச் சுழித்துப்பாதையெடுத்து ஒடுகின்றது தண்ணீர் நெருப்புப் பாம்புகள் வானமெங்கும் நெளிகின்றன.

''மாட மாளிகைகள் கட்டித் தருகின்றேன். வீதிகளைச் செப்பனிட இன்றே ஆணையிடுகின்றேன். குளங்களைத் திருத்தச் சொல்கின்றேன். இன்னும் என்னவேண்டும்? அரங்குகள் வேண்டுமா? தானியங்கள் தேவையா? பட்டாடைகள் வேண்டுமா? என்ன வேண்டும் சொல்லுங்கள் .. இவற்றையெல்லாம் நான் தரத்தயார். ஆனால் ஒருபோதும்...

அரசன் தன் வாக்கியத்தை முடிப்பதற்குள் ஒரு பெரிய மின்னல் வானத்திற்கும் பூமிக்குமாகக் கோடிழுத்த ஒரு நீண்ட மின்னல். ஒரு கணம் கண்ணொளி மங்க அதிர்ந்து போனான் ஊமையன். கண்களைக் கசக்கி விட்டு அவன் உயரத்தே பார்த்தான்.

பேசிக் கொண்டிருந்த அரசன் மாயமாக மறைந்து போயிருந்தான்.

நன்றி: இந்தியா டுடே


பரிசுப்புதையல்

உங்களுக்காக!

நங்கூரம் அனைத்து இதழ்களையும்

தவறாமல் பத்திரப்படுத்தி வையுங்கள்.

2ஆம் ஆண்டு நிறைவையொட்டி

நங்கூரம் நடாத்தும்

சமூக அறிவியல் பொது அறிவுத் தேர்வு

உங்களைப் பரிசுக்குரியவராக்கும்!

(சி 9400)


# மண்டேலா

இந்நிலைக்கு ஒரு பிரதான காரணமுண்டு. தற்போது தென்னாபிரிக்காவில் உள்ள இந்தியர் தொகை ஒரு மிலியன். இதில் அரைப் பங்கினர் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள். இவர்கள் பெரும்பாலும் நேட்டால் மாநிலத்திலேயே வாழ்பவர்கள். எனவே இவர்கள் இன்காதா கட்சியின் சீற்றத்தைச் சந்திக்க விரும்பாததாலும், வெள்ளையரின் பிரித்தாளும் தந்திரத்தாலும், பயன்பெற்ற இந்தியர்கள் கறுப்பரால் தமக்கு ஏதும் ஆபத்துக்கள் இனிமேல் வரலாம் என்று அஞ்சி கிளார்க்கின் தேசியக் கட்சிக்கு வாக்களித்ததாகவும் கூறப்படுகிறது. அதுபோலவே மேற்கு கேப் மாநிலத்திலும், அதிகமுள்ள கலப்பின மக்களான (Coloured People) உள்ள மலேயா, இந்தோனேசியா, சீன வழித்தோன்றல்களும் தமது 2.3 மிலியன் வாக்குகளில் பெரும்பான்மையைத் தேசியக் கட்சிக்கு வாக்களித்தமை தொண்டையில் சிக்கிய முள்ளாக இப்போது நெருடுகிறது. இருந்தபோதும் தென்னாபிரிக்கா கறுப்பினத்தவர்களுக்கோ அல்லது வெள்ளையர்களுக்கோ உரியது அல்ல. ஒருபோதும் பெரும்பான்மை என்கிற பலத்தை நான் பயன்படுத்தேன். தேசிய இணக்கமே எனது இலக்கு என மண்டேலா கூறி வருவது இம் மக்களின் அச்சத்தை நீக்க வேண்டும். இதற்கு எதிர்காலமே பதில் கூற வேண்டும்.

இப்பொழுது மண்டேலா இன்னொரு அற்புதத்தை நிகழ்த்திக்காட்ட வேண்டும். வெள்ளையர்க்கும், கறுப்பருக்குமான வாழ்க்கைத்தர இடைவெளி மிக நீண்டது. விடுதலை பெற்ற கறுப்பருக்கு எரிச்சலை ஊட்டக் கூடியது. எனவே நிலமற்ற, வீடற்ற கறுப்பர்கள் இனிமேல் என்ன செய்வார்கள் என்பது ஊகிக்கமுடிகிற விடயம். உயர் பதவிகளில் ஒரு விழுக்காட்டுக்குக் குறைவான நிலையிலேயே கறுப்பர்கள் உள்ளனர். மூவாயிரம் உயர் பதவிகளில் இருபது பேர்களே கறுப்பர்கள் இருந்ததாக 92ஆம் ஆண்டு புள்ளி விபரம் ஒன்று கூறுகிறது. கறுப்பர்களில் 50 /· விழுக்காட்டுக்கு மேல் வேலையற்று உள்ளனர். 70 லட்சம் கறுப்பர்கள் சேரிப் புறங்களில் வாழ்கின்றனர்.

எனவே இப்போது மண்டேலா 25 லட்சம் வேலை வாய்ப்புகளை உடனடியாக உருவாக்கப் போவதாக பல மிலியன் வீடு கட்டப் போவதாக 10 வயது வரை இலவசக்கல்வி வழங்கப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளார். இதை அவர் நிறைவேற்ற வேண்டும். இன்னமும் பல தடைகள் உள்ளன. உண்மையான அரசியல் அதிகாரம் கேப்ரவுணிலுள்ள நாடாளுமன்றத்தில் இல்லை. அது இன்னமும் வலதுசாரி வெள்ளை இன உயர் அதிகாரிகளிடமும் பாதுகாப்பு படைகளை பொறுப்பில் வைத்திருக்கும் வெள்ளைஇன இராணுவ அதிகாரிகளிடமும் இருப்பதாக ஒரு ஆய்வாளர் குறிப்பிடுகிறார் எனவே மண்டேலா இன்னொரு அற்புதத்தை இனிமேல் நிகழ்த்திக்காட்டவேண்டும். அதற்கான உறுதிப்பாடு அவருக்கு கிடைக்கட்டும் என்று நாம் வாழ்த்துகின்றோம்,


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இராமநாதன் நுண்கலைக்கழகம்

இசை விழா

13.05.94 தொடக்கம் 15.05.94 வரை

(மூன்று தினங்கள்)

கைலாசபதி கலை அரங்கம்

அன்புடன் அழைக்கின்றோம்

முதலாம் நாள் நிகழ்வுகள்

13-05-94 - வெள்ளி

மாலை

மங்கல விளக்கேற்றல்

கலைப்பீடாதிபதி பேராசிரியர் P. பாலசுந்தரம்பிள்ளை

4.00 - 5.00 மணி

| | | |
|---|---|---|
| S. குமாரசாமி | — | பாட்டு |
| R. S. கேசவமூர்த்தி | — | வயலின் |
| K. கண்ணதாஸன் | — | மிருதங்கம் |
| சதா வேல்மாறன் | — | கடம் |
| S. ஹரிதரன் | — | கஞ்சிரா |

5.00 - 6.30 மணி

| | | |
|---|---|---|
| R. ராதாகிருஷ்ணன் / S. கோபிதாஸ் | — | இரு வயலின் |
| M. சிதம்பரநாதன் / K. கண்ணதாஸன் | — | மிருதங்கம் |
| சதாவேல்மாறன் | — | கடம் |
| S. ராஜு | — | மோர்சிங் |

6.30 - 8.00 மணி

| | | |
|---|---|---|
| S. கணபதிப்பிள்ளை | — | பாட்டு |
| S. வெங்கடேஸ்வரசர்மா | — | வயலின் |
| N. சிவசுந்தர் | — | மிருதங்கம் |
| K. கஜன் | — | கடம் |

வாழ்த்துவோர்:

'ராஜன் இசையகம்'

இசைக்கருவி திருத்தகம்

142, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்,

(சி-9397)

# அ. தி. மு. க - காங்கிரஸ் மோதல் உச்சகட்டம்; நாட்களை எண்ணும் ஜெயலலிதா அரசு

"உங்கள் நண்பருக்குச் சொல்லுங்கள் அவரது ஆட்சியின் நாட்கள் எண்ணப்படுகின்றன. இதில் என் பங்கு மிகச் சிறியது. அவர் மீது எனக்குத் தனிப்பட்ட துவேசம் எதுவும் கிடையாது. என்னை அவர் திட்டமிட்டு அவமதிக்கின்றாரே என்ற கோபம் எனக்குண்டு. ஆனால், அவரது நடவடிக்கைகள் எந்தளவிற்கு டில்லியின் கோபத்தை உண்டாக்கியிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியாதா? தயவு செய்து இப்பெண்மணிக்காகப் பரிந்து பேசிக் கொண்டு வராதீர்கள்"

முன்னாள் இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமனிடம் தமிழக ஆளுநர் சென்னாரெட்டி கூறியதான இவ் வார்த்தைகள் தமிழக அரசிற்கும், ஆளுநருக்கும் இடையிலான முரண்பாட்டை மட்டுமல்ல, மத்தியிலுள்ள காங்கிரஸ் ஆட்சிக்கும் - மாநிலத்திலுள்ள அ தி மு க ஆட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை வெளிக்காட்டுவதாகவும் உள்ளது.

கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் காங்கிரஸ் - அ தி மு க உறவு முறிந்ததில் இருந்து இரு பகுதியினருக்கும் இடையில் ஆரம்பமான பனிப்போர் தற்பொழுது ஒரு முடிவு நிலைக்கு வந்துள்ளது. அதாவது, மறைமுக மோதல்கள், குற்றச்சாட்டுக்கள் ஆகிய பனிப்போரின் பண்புகள் மாறி இரு பகுதியினரும் வெளிப்படையாகவே மோதிக் கொள்ளும் கட்டத்தை அடைந்துள்ளனர்.

இம் மோதலின் உச்ச கட்டம் கடந்த மாதம் ஆரம்பித்த சட்டசபைக் கூட்டத் தொடரில் தினமும் எதிரொலித்தது. சட்ட சபையின் கூட்டத் தொடரில் பெரும்பகுதி காங்கிரஸ் உறுப்பினர்கள் இன்றியே இடம்பெற்றது. ஆளுநர் உரையுடன் ஆரம்பித்த இம் மோதல்நிலையானது, திருச்சியில் நடந்த வழிப்பறிக் கொள்ளை தொடர்பான காங்கிரஸ் கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றின்போது உச்சக்கட்டத்தை அடைந்தது.

இத்தீர்மானத்தில் குறுக்கிட்டுப் பேசிய தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, "இந்த ஆட்சி மீது களங்கம் கற்பிக்க எமக்கு எதிராக டில்லியில் சூழ்ச்சி வலை பின்னப்படுகின்றது. இதன் எதிரொலியாகத்தான் தமிழ் நாட்டில் வேண்டுமென்றே வழிப்பறிக் கொள்ளைகள் நடத்தப்படுகின்றன" என மத்தியிலுள்ள காங்கிரஸ் அரசை சாடினார். இதைத் தொடர்ந்து எழுந்த வாக்குவாதத்தை அடுத்து காங்கிரஸ் கட்சி சட்டமன்றத் தலைவர் பாலசுப்பிரமணியம் தலைமையில் காங்கிரஸ் உறுப்பினர் வெளிநடப்புச்செய்தனர். ஆயினும் ஐந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்யாமல் சபைக்கூட்டத்தில் கலந்து கொண்டு காங்கிரசிற்குள் உள்ள முரண்பாட்டின் சின்னமாக இருந்தனர்.

இதன் பிற்பாடு தமிழக அரசியல் நிலை சற்று சூடுபிடிக்கத் தொடங்கியது. மத்திய மாநில அரசுகளுக்கு இடையில் வெளிப்படையாக முறுகல் நிலை உருவானது. இதைத் தொடர்ந்தே மத்திய அமைச்சர் எஸ். பி சவான் தமிழகத்திற்கு விஜயம் செய்ததாகவும், ஜெயலலிதா அரசிற்கு எதிரான தகவல்கள் பலவற்றைத் திரட்டிச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

தமிழக அரசிற்கும் மத்திய அரசிற்கும் இடையிலான கசப்பு தற்பொழுது தான் ஏற்பட்டதல்ல கடந்த வருடம் ஆளுநராக சென்னாரெட்டி நியமிக்கப்பட்டதில் இருந்தே உருவானபோதும், காங்கிரஸ் தலைமைப் பீடம் திடீரென ஜெயலலிதாவுடன் உறவை முறித்துக் கொள்ளும் அளவிற்குச் செல்லவில்லை. இதனை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும் உறவை முறித்துக் கொண்டாலும் காங்கிரசுடன் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. காங்கிரசினால் தமது ஆட்சியைக் கவிழ்த்து விட முடியும் என்ற அச்ச உணர்வு இருந்துகொண்டேயிருந்தது. இதன் காரணமாகவே டில்லியில் காங்கிரஸ்- அ. தி. மு. க. தலைவர்கள் சந்திப்பு ஒவ்வொன்றின் போதும் உறவு-பிரிவு என்பனபற்றிப் பேசப்பட்டு வந்தன. அல்லது பேசப்பட்டது போல் வெளிக்காட்டப்பட்டது.

இந்நிலையில், தமிழககாங்கிரஸ்கட்சி தலைமையே பெரிதும் தர்மசங்கடமான நிலையில் இருந்தது. அ. தி மு. க அரசுடன் மோதலில் ஈடுபட்ட தமிழக காங்கிரஸ் தலைவர்கள் மத்தியில் இருந்து தமக்கு ஆதரவு கிட்டவில்லை என்ற நிலையில் விரக்தி அடைந்தனர். இந்நிலையானது "அ தி மு க உறவுகோரி போயஸ் தோட்டத்துக் கதவுகளைத் தட்டச் செல்லும் மத்திய அமைச்சர்களுக்குக் கொஞ்சம் கூட மானம், மரியாதை கிடையாது" என்று சகட்டு மேனிக்கு வாழப்பாடி இராமமூர்த்தியும், மூப்பனாரும் விமர்சனம் செய்யும் நிலை வரை சென்றது.

இதேசமயம்காங்கிரஸ்கட்சியுடன் உறவைப் புதுப்பித்துக்கொள்வதானால் சில புதிய நிபந்தனைகளைக் காங்கிரஸ் மேலிடத்திற்கு செல்வி ஜெயலலிதா விதித்திருந்தார். இதன் பிரகாரம் கூட்டுஒன்று ஏற்படவேண்டுமானால், அது இடைத்தேர்தல், சட்டமன்றத் தேர்தல், ராஜ்ய சபா தேர்தல் என்று இல்லாமல் நிலையானதாக இருக்கவேண்டும் என்பதே அவரதுமுக்கியநிபந்தனையாகஇருந்தது இந்நிபந்தனை தமிழக காங்கிரஸைப் பொறுத்து அதற்கு மேலும் ஆத்திரத்தையே அதிகரிக்கச்செய்தது- காங்கிரஸ் கட்சியுடன் உறவு முறிந்ததென அறிவித்தவர் ஜெயலலிதா. பின்னர் உறவிற்கு நிபந்தனை விதித்ததே அவர்களுக்குள் ஏற்பட்ட கடுகடுப்புக்குக் காரணமாகும்

இந்நிலையில், மார்ச் மாத இறுதியில் டில்லிசென்று பிரதமரும், காங்கிரஸ் கட்சியின் தலைவருமான நரசிம்மராவைச் சந்தித்த தமிழக காங்கிரஸ் தலைவர்கள்- வாழப்பாடி இராமமூர்த்தி உட்பட- தமிழ்நாடு தொடர்பாக குறிப்பாக, அ தி மு க வுடனான உறவுநிலை குறித்து தெளிவானதொரு நிலைப்பாட்டைத் தெரிவிக்குமாறு வற்புறுத்தினர்.

அத்தோடு, தமிழகத்தில் அ தி மு க அரசு நடந்துகொள்ளும் விதம் பற்றியும், காங்கிரஸ் கட்சிக்கும் அதன் தலைமைத்துவத்திற்கும் மாசு கற்பிக்க முற்படுவது பற்றியும் உணர்ச்சி மேலிட்ட நிலையில் விபரித்துள்ளனர் தமிழகத்தில் ஜெயலலிதா காங்கிரசையும் அதன் தலைமைத்துவத்தையும் இழிவுபடுத்திப்பேசிய சில பேச்சுக்களையும் நரசிம்மராவிடம் கொடுத்துள்ளனர்.

உள்ளக் குமுறலோடு அவர்கள் தமது அவலத்தை வெளியிட்டபோது ஒருகட்டத்தில் உணர்ச்சி எல்லை மீறியது அப்பொழுது "ஏன் இப்படி உணர்ச்சி வசப்படுகின்றீர்கள்" என நரசிம்மராவ் கேட்கும் அளவிற்கு நிலைமை சென்றது- அதற்குப்பதில் அளித்த தமிழக காங்கிரஸ் தலைவர்கள் "உணர்ச்சி வசப்படவில்லை உணர்ச்சி கொப்பளிக்கின்றது- ரத்தம் கொதிக்கிறது இன்னமும் வாய்மூடி நீங்கள் மௌனமாக இருந்தால் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி ஒன்று இருக்காது" எனக் கூறியதாகத் தெரிகின்றது-

இதன் பின்னரே நரசிம்மராவ் தனதுமௌனத்தைக்கலைத்து வழமை போலவே தனது பாணியிலேயேவிளக்கமும் கூறினார் "அ-தி-மு-கவுடன் உறவைப்புதுப்பித்துக் கொள்ளவேண்டும் என்று எங்கே? எப்பொழுது நான் கூறினேன்?" என கேள்வி எழுப்பிய அவர் தன்னைச் சந்தித்த அ-தி-மு-க எம்பிக்கள் சிலரிடம் இன்றைய சூழ்நிலையில் உறவைப் புதுப்பிப்பது சாத்தியமாகாது எனத் தெரிவித்ததோடுஅவர்களின் அநாகரிகப் பேச்சுக்களை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜெயலலிதாவிடம் கூறுமாறும் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

இறுதியில் இப்பேச்சுக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்த நரசிம்மராவ் 'இப்போதைக்கு உறவுக்கதவுகள் மூடப்பட்டுவிட்டது என்று அவர்களிடம்- அ,தி,மு,க எம்.பிக்கள் -தெளிவாகவே கூறிவிட்டேன் என்னுடைய அங்கீகாரத்துடன் என் சார்பில்இதை நீங்களும்தெரிவித்துவிடலாம்" எனக் கூறியதோடு "நான் அளந்துபேசுபவன், நின்று நிதானித்துத்தான் ஒவ்வொரு அடியும் எடுத்து வைத்து முன்னேறுவேன் இதை நீங்கள் உணர்ந்து மற்றவர்களுக்கும் தெரிவியுங்கள்" என்றும் கூறினார்.

ஆனால், நரசிம்மராவின் இம்முடிவிற்கு தனியாக, காங்கிரஸ் கட்சி மீதும்அதன் தலைமையின் மீதும் ஜெயலலிதாவும் அவரது சீடர்களும் சுமத்திய குற்றச்சாட்டுகள், இழிவான பேச்சுக்கள் மட்டும் காரணமல்ல. காங்கிரஸ் கட்சியை உடைக்கும் முயற்சியில் ஜெயலலிதா ஈடுபடாமலேயே அவர் அ-தி-மு-க அரசிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பச்சைக் கொடி காட்டியதாக துணிந்து கூற முடியும்

தமிழக சட்டசபையில் 61பேரைக் கொண்ட காங்கிரஸ் கட்சியை உடைத்து ராஜீவ் தேசிய காங்கிரஸ் என்ற பெயரில் புதிய கட்சியை உருவாக்கி அ-தி-மு-கவுடன்சேர்த்துக் கொள்ளும் ஜெயலலிதாவின்திட்டமானது நரசிம்மராவிற்குஆத்திரத்தை ஏற்படுத்தியதில் வியப்பொன்றுமில்லை-காலாகாலமாக ஏனைய கட்சியை உடைத்தே பழகிப் போய்விட்ட காங்கிரஸ் கட்சிக்கு மாநிலக் கட்சி ஒன்று தனது கட்சியை உடைப்பதென்பது பொறுத்துக் கொள்ள முடியாத ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கும் விடயம் என்பதில் சந்தேகமில்லை

இந் நிலையில் தான் இனி மேலும் தாமதித்தால் தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி ஒன்று இருக்காது சின்னா பின்னமாகி விடும் என்ற நிலையில் அ. தி. மு. கவுடன் உறவை முறித்துக் கொள்வதாகப் பகிரங்கமாகத் தெரிவிக்கும் முடிவுக்கு ராவ் வந்தார் இம் முடிவானது தனியாக அ. தி மு. க -காங்கிரஸ் உறவை மட்டும் முறித்துக் கொண்டதாக இருக்கப் போவதில்லை அ. தி. மு. க. அரசின் எதிர்காலத்தையும் தீர்மானிப்பதாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை அதாவது ஆளுநர் சென்னா ரெட்டி கூறியது போல் அ. தி, மு. க அரசாங்கத்தின் நாட்கள் எண்ணப்படத் தொடங்கி விட்டன என்பதே யதார்த்த நிலையாகும்.

இதேசமயம் நரசிம்மராவின் இம் முடிவு வெளியானதைத் தொடர்ந்து ஜெயலலிதாவும் காங்கிரசுடன் இனி மேல் உடன்பாடு என்பதற்கு இடமே இல்லை என அறிவித்தார். 'காங்கிரஸ் கட்சியோடு இனி ஒட்டும் இல்லை உறவும். இல்லை பற்றும் இல்லை பாசமும் இல்லை. மயிலாப்பூர் பெருந்துறை இடைத்தேர்தல்கள் மட்டுமன்றி வேறு எந்தத் தேர்தலிலும் இரண்டாண்டுகள் கழித்து வரவிருக்கும் பொதுத் தேர்தலிலும் காங்கிரசுடன் உறவு கூட்டு என்பது அறவே கிடையாது சொந்தக்காலில், சொந்தப்பலத்தில் நின்று இனிவரவிருக்கும் தேர்தல்களில் அ. தி. மு. க போட்டியிடும்" என ஜெயலலிதா தெரிவித்தார்.

இந்நிலை குறித்து காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் "போர்க்களத்தில் எல்லைக் கோடுகள் வரையப்பட்டு விட்டன" எனக் கூறியிருப்பது பொருத்தப்பாடானதே ஆகும். ஆனால், இக்களத்தில் ஜெயலலிதா ஒருபுறம் நிற்க மறுபுறத்தில் நரசிம்மராவ் - ஆளுநர் என பலமான அதிகாரத்துடன் கூடிய ஒரு பெரிய அணியே நிற்கின்றது.

இதனை ஜெயலலிதாவும் புரிந்து கொள்ளாமல் இல்லை. ஏற்கனவே ஆளுநர் சென்னாரெட்டியுடன் ஜெயலலிதா முரண்பாட்டை வளர்த்துக் கொண்டமையால் தமிழக அரசு மீதான குற்றச்சாட்டுக்களை மத்திய அரசிற்கு அவர் அனுப்பிக்கொண்டே இருக்கின்றார். சுருக்கமாகக் கூறின் அ தி மு க அரசை விரட்ட தனக்கு ஒரு சந்தர்ப்பம் வராதா என்ற நிலையில் அவர் உள்ளார்

இதனைச் சென்னாரெட்டியின் கூற்றுக்களே நிரூபிப்பவையாக உள்ளன இதனை அண்மையில் தமிழக அரசின் ஊழல் பட்டியலைச் சமர்ப்பிக்கச் சென்ற வாழப்பாடி ராமமூர்த்தியிடம் "உங்கள் முயற்சி வெற்றிபெற எனது வாழ்த்துக்கள்" எனத் தெரிவிதுள்ளதில் இருந்தேபுரிந்துகொள்ளமுடியும் அதை உறுதிப்படுத்துமாப் போல, ஊழல் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட ஒருவார காலத்திற்குள் ஜன திபதிக்கும் பிரதமருக்கும் உள்துறை அமைச்சருக்கும் அனுப்பிவைத்தமை உள்ளது அத்தோடு அதிகார துஷ்பிரயோகம் குறித்தும் ஆளுநர் அடிக்கடி மத்திய அரசிற்குத் தகவல் அனுப்பிவருகின்றார் இந்நிலையில் நரசிம்மராவின் ஆசீர்வாதமும் ஆளுநருக்குக் கிடைக்கப்பெற்றுவிட ஜெயலலிதாவும் சற்று தடுமாறிப்போயுள்ளார்.

இந்நிலையில் தான் இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி வெங்கட்ராமன் ஆளுநர் சென்னா ரெட்டிக்கும் தமிழக முதல்வருக்கும் இடையில் சமரசம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டார். வெங்கட்ராமன் தனது அந்தஸ்தையும் கௌரவத்தையும் பாராது இதில் எடுத்துக் கொண்ட முயற்சி தோல்வியிலேயேமுடிவுற்றுள்ளது. இதே சமயம் திரு' வெங்கட்ராமனின் சமரச முயற்சி அவரின் கௌரவத்தையே பாதிக்கும் அளவிற்கும் சென்றது சென்னாரெட்டியுடன் நடந்த பேச்சுக்களின் போது ஒரு கட்டத்தில் "ராஷ்டிரபதிஜி உங்கள் மேல் நான் அளவு கடந்த மரியாதை வைத்திருக்கிறேன் தயவு செய்து தமிழகத்தில் அரசியல் செய்யாதீர்கள்" என சென்னா ரெட்டி கூறும் அளவிற்கு நிலைமை இருந்தது.

இதனைப்பார்க்கும் போது இன்று அ. தி. மு. க. அரசாங்கத்தின் எதிர்காலம் பெரும் கேள்விக்குள்ளாகியுள்ளது என்பதில் சந்தேகமில்லை ஜெயலலிதாவுடன் முரண்டு பிடிப்பது என்றே மத்திய அரசு தீர்மானித்து விட்டது. விடுதலைப்புலிகள் தடை விவகாரமே இதற்குச் சான்றாகும்.

இதேசமயம் தமிழக எதிர்க்கட்சிகளும் அ.தி மு க அரசிற்கு எதிரான தமது போராட்டங்களைத் தொடங்கியுள்ளன ஆளுநரிடம் ஊழல் பட்டியல் சமர்ப்பிப்பு, அரசின் ஜனநாயகவிரோதப் போக்கிற்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் என தொடங்கி விட்டன. மேலிடத்து ஆதரவு ஆளுநர்க்கு உற்சாகமூட்டுவதாகவுள்ளது

இந்நிலையில் அ தி மு க அரசின் ஆட்சிக்காலத்தின் நாட்கள் எண்ணப்படுகின்றன என்பதில் சந்தேகமில்லை இதில் எண்ணுபவர்கள் செல்வி ஜெயலலிதாவாகவுமிருக்கலாம் தமிழக காங்கிரஸ் கட்சியினராகவும் ஏன் ஆளுநராகவும்கூட இருக்கலாம். ஆனால் எத்தனை நாள் எனத் தீர்மானிப்பவர் பிரதமர் நரசிம்மராவ் மட்டுமாகவேதான் இருப்பார்

ஆனால், இத்தீர்மானம் நரசிம்மராவின் குண நலனுக்கு ஏற்ப ஆறுதலாகவும், நிதானத்துடனும், அதாவது தமிழக அரசியல் சூழ்நிலை

---

**ஜெயராஜ்**

---

காங்கிரஸிற்கு சாதகமாக ஒரளவேனும் கனிந்துவரும் நிலை வரும் வரையில் எடுக்கப்படும் என்றே எதிர்பார்க்கலாம்

அதேபோன்றே அ தி மு.க ஆட்சியை எதன் அடிப்படையில் கலைப்பதென்பதையும் ராவே தீர்மானிப்பார். இது ஊழலா? அதிகார துஷ்பிரயோகமா? சட்டம் ஒழுங்கு சீர்கேடா? விடுதலைப் புலிகளின ஊடுருவலா? இதில் எதுவாகவும் இருக்கலாம். அல்லது வேறு காரணமும் கண்டு பிடிக்கப்படலாம். ஆனால் இதற்கு கேள்விகள் தடைகள் உருவாகாது. ஏனெனில், மத்திய அரசு கூறும் காரணம் சரியாக இருக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இந்திய அரசியலுக்குக் கிடையாது.

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்
நடாத்தும்

## கரும்புலிகள் நாளையொட்டிய

# அரங்க விழாவும், கிராமிய ஆட்டக் கலை விழாவும்

05 - 07 - 1994 அன்று நடைபெறவிருக்கும் கரும்புலிகள் நாளையொட்டி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் மாவட்டங்கள் மட்டத்தில் நடாத்தவிருக்கும் இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் அமைப்புகள், தனிநபர்களுக்கான விதிமுறைகளை கீழே வகைப்படுத்தித் தருகின்றோம்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களும், கோட்ட மட்டத்திலான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழக செயலகங்களில் 02 - 06 - 1994க்கு முன்னதாக நேரில் கையளிக்கப்படவேண்டும்.

### அரங்க அளிக்கைகளும் போட்டி விதிமுறைகளும்

1. பாரம்பரிய அரங்க முறைமைகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக கூத்து, இசைநாடகம், வரலாற்று நாடகம், இலக்கிய நாடக வடிவங்களைக்கொண்டவையாக இவை அமையும்.
2. நவீன அரங்க முறைமைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் நாடகங்கள். உதாரணமாக இயல்புநெறிவாதம், யதார்த்தவாதம், மோடிமை, குறியீட்டுத்தன்மை கொண்டவையாக இவை அமையும்.

### பொது அறிவுறுத்தல்கள்:

1. கலைவடிவங்களின் கருப்பொருள் சமகாலப் பிரச்சினைகள், நிகழ்வுகளையொட்டியதாகவும், கலையம்சம் நிறைந்ததாகவும், எமது விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதாகவும் அமைதல் வரவேற்கத்தக்கது.
2. நாடகம் 45 நிமிடங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். (ஐந்து நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)
3. அ) சிறந்த நடிகர் ஆ) சிறந்த நடிகை
இ) சிறந்த நெறியாள்கை ஈ) சிறந்த எழுத்துரு
உ) சிறந்த இசையமைப்பு
ஊ) சிறந்த வேடப்புனைவு
என்பவற்றிற்கு சிறப்புப்பரிசுகள் வழங்கப்படும்.

### சிறுவர் அரங்கு:

சிறுவர்களின் வயதிற்கும் உள வளர்ச்சிக்கும் அமைவாகக் கருப்பொருள் அமையவேண்டும். அத்துடன் நாடக அளிக்கையில் சிறுவர்களே பங்கு கொள்ள வேண்டும். பின்னணி வாத்தியக்கருவிகளை மட்டும் பெரியோர் கையாளலாம்.

### பொது அறிவுறுத்தல்கள்:

அ) நாடக அளிக்கையில் ஆறு தொடக்கம் பன்னிரண்டு (6—12) வயது வரையுள்ள சிறுவர்கள் கீழ்ப்பிரிவிலும், 13 தொடக்கம் 17 வயது வரையுள்ளவர்கள் மேற்பிரிவிலும் அடங்குவர்.

ஆ) கீழ்ப்பிரிவு நாடகம் 20 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
(2 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

இ) மேற்பிரிவின் நாடகம் 30 நிமிடங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
(5 நிமிட விலகல் மட்டும் அனுமதிக்கப்படும்)

ஈ) சிறுவர் நாடகங்களை பாடசாலைகளோ, தனிநபர்களோ, அமைப்புக்களோ தயாரிக்கலாம்.

உ) நாடகங்களில் பங்கேற்கும் சிறுவர்களின் வயதெல்லையை பாடசாலைகளாயின் பாடசாலை அதிபர்களும், தனிநபர் தயாரிப்பு அல்லது அமைப்புக்களின் தயாரிப்புக்களாயின் அப்பகுதி கிராம சேவகரும் உறுதிப்படுத்த வேண்டும்.

ஊ) நாடக அளிக்கையில் பங்குகொள்ளும் சிறுவர்களின் எண்ணிக்கை 15க்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

### கிராமிய ஆட்டக் கலைப் போட்டிகள்:

1) கோலாட்டம் 2) கரகம்
3) ஆட்டக்க வடி 4) கும்மி

### பொது அறிவுறுத்தல்கள்:

அ) இவை ஒவ்வொன்றும் 10 நிமிடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

குறிப்பு:

அ) ஒவ்வொரு போட்டியிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று தெரிவுகளுக்கும் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

ஆ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

இ) தயாரிப்புக்களுக்கான செலவுகளையும், போக்குவரத்துக்கான செலவுகளையும் தயாரிப்பவர்களே பொறுபேற்க வேண்டும் மாவட்ட மட்டத்திலான போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படும் தயாரிப்புகளுக்கான போக்குவரத்து வசதிகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பொறுப்பேற்கும்

ஈ) மேலதிக விபரங்களைப்பெற விரும்புவோர் அந்தந்த கோட்டக் கலை, பண்பாட்டுக் கழகச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகம்
நடுவப் பணியகம்
தமிழீழம்

(சி-9393)

## கல்வி நிலையில் ______


1992, 1993 ஆகிய வருடங்களில் பரீட்சைக்குத் தோற்றிய எமது மாணவர்கள் உயர்தர வகுப்பில் முறையாக இரண்டு வருடங்கள் கற்க முடியாத நிலையிலிருந்தவர்கள். வழமையான பரீட்சைக்குத் தோற்ற முடியாது விசேட பரீட்சைக்குத் தோற்றியவர்கள் ஆகியோரை உள்ளடக்கும். இக்காலப் பகுதியிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் போதிய அளவில் இப்பல்கலைக்கழகத்தில் சேரவில்லை. இப்பல்கலைக்கழகத்தில் பலதுறைகளில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன- இந்நிலை எமது பிரதேசத்திலிருந்து போதிய மாணவர்கள் சித்தியடையவில்லை எனும் பொய்த்தோற்றத்தைக் காட்டும் இது உண்மைக்குப் புறம்பானது பல்கலைக்கழகங்களின் ஒவ்வொரு துறை அனுமதிக்கும் எமது பிரதேசத்திற்குரிய வெட்டுப் புள்ளி உயர்வாக இருப்பது எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சி நிலையினைக் காட்டவில்லையா?

பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் நாம் எமது கல்வி நிலையினை அளவிடப்பேனால் (விமர்சிப்பவர்கள் அளவிடுவது போல்) எமது கல்வியில் இன்றைய சூழ்நிலையின் அடிப்படையில் எவ்வித வீழ்ச்சியுமில்லை எனத் திடமாகக் கூறலாம்.

கல்வியாளர்கள் கவனிக்க வேண்டியதொன்று உண்டு. போர்க்காலச் சூழலினால் பாதிக்கப்பட்ட ஒரு சந்ததி உண்டு அச் சந்ததி 1987க்குப் பின்னே தமது ஆரம்பக் கல்வியினை தொடங்கியவர்கள் என்பதாகும்.

இவ்வாறு இக் காலகட்டத்தில் இத்தகைய சூழலில் கல்வி கற்கபுகுந்த மாணவர்கள் ஆரம்ப நிலையில் இருந்தே மனத்தாக்கத்துக்கு உட்பட்டவராகவும், பெற்றோர்களின் நேரடிக் கவனிப்புக்கு உட்படாதவராகவும் வளர்கின்றனர். இதனால் இவர்கள் தம் தாய்மொழியில் கூட சரியாக எழுத வாசிக்க இயலாதவராக இருக்கின்றனர். ஆகவே எமது கவனம் அவர்கள் மீது விசேடமாகச் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும்

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் கரேந்திரன்
### (செல்வவிநாயகம் ஞானசேகரன்)

அன்னையின் மடியில்: 13. 12. 1967
தமிழீழ விடியலில்: 13. 5 1988

பறிபோகும் எம் தேசத்தை மீட்கவே
திருமலையில் உன் முதற் களத்தை தொடங்கினாய்
எமை அடக்க வந்த இந்தியனுக்கு
நாம் ஒரு கொத்தடிமை இல்லை எனப் பாடம் புகட்டினாய்
நீ கண்ட தமிழீழக் கனவுடனே கண்களை மூடினாய்
உன் இலட்சியங்களை நாம் மறக்கவில்லை
உன் கனவுகள் நனவாகும் வரை தொடர்வோம் - பயணத்தை
வெல்க புலிகள்! மலர்க தமிழீழம்!

ஞானசேகரன் வீதி, நெடியகாடு, வல்வெட்டித்துறை.

அப்பா, அம்மா, தம்பி, தங்கை, உறவினர், நண்பர்கள்

(8198)

கொழும்பு ஸ்ருடியோ

தொழில் நுட்பத்தில் 35 வருட அனுபவம் வாய்ந்தவர்கள்

தரமான
- Line, Half tone and Colour Blocks
- றபர் சீல் Rubber Stamps
- சில்க் ஸ்கிறின் Silk Screen
- Re copy பழைய படங்களில் இருந்து புகைப்படங்களைப் பெரிதாக்க எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்.

குறைந்த செலவில் குறுகிய காலத்தில் தரமாகப் பெற்றுக்கொள்க,

கொழும்பு ஸ்ருடியோ
05, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.

(சி-9395)

O/L
DAY CLASSES

ஆரம்பமாகி விட்டன
வாரத்தில் 4 நாட்கள்
அனைத்துப்பாடங்களும்
நடைபெறுகின்றன.

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்.

(சி 9385)

Nallur Branch Library


# வதிவிட வேளாண்மைப் போட்டி கோட்ட - வட்ட ரீதியான முடிவு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடாத்தப்பட்ட 93/94 ஆம் ஆண்டுக்கான வதிவிட வேளாண்மைப் போட்டியில் கோட்ட வட்டரீதியாக வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன மாவட்ட ரீதியாக வெற்றி பெற்றவர்களின் விபரம் ஏற்கனவே வெளியாகி இருந்தமை தெரிந்ததே.

## கோட்ட மட்டம்

**வடமராட்சி**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | சி. செல்லமுத்து | போதனார் மடம், துன்னாலை வடக்கு |
| 2-ம் இடம் | வே. கணபதிப்பிள்ளை | பெரியவளவு, இல1 சாலையடி |
| 3-ம் இடம் | சி. மயில்வாகனம் | நெல்லியடி வடக்கு |

**தென்மராட்சி**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | சு. கருணாகரன் | மூகமாலை வடக்கு பளை |
| 2-ம் இடம் | மு. சின்னத்துரை | வேம்பொடுகேணி பளை |
| 3-ம் இடம் | த. இராசையா | இராமாவில் கொடிகாமம் |

**வலிகாமம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | ஆ. நிரஞ்சன் | அச்செழு நீர்வேலி. |
| 2-ம் இடம் | சு. விக்கினேஸ்வரன் | அர்ச்சின்சன் வீதி, வட்டுக்கோட்டை |
| 3-ம் இடம் | வை. தனீஸ் | ஆறாம்கட்டை, பூதர்மடம் |

## வட்டமட்டம்

**கரவெட்டிவட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | சி. பரமேஸ்வரி | நாவலர் மடம் நவிண்டில், கரவெட்டி. |
| 2-ம் இடம் | சி. மயில்வாகனம் | நெல்லியடி வடக்கு |
| 3-ம் இடம் | வை தணிகாசலம் | துன்னாலை |

**பருத்தித்துறை வட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | ஆ. கஜேந்திரன் | பண்டிக்கண்டன் கெருடாவில் வடக்கு |
| 2-ம் இடம் | ஆ. சிவபாலகிருஷ்ணன் | புலோலி கிழக்கு |
| 3-ம் இடம் | சி. பொன்னுத்துரை | புலோலி வடகிழக்கு |

**மருதங்கேணி வட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | திருச்செல்வம் | செம்பியன்பற்றுதெற்கு |
| 2 ம் இடம் | சு செல்வக்கிருஸ்ணன் | வத்தராயன் தெற்கு |
| 3 ம் இடம் | பொ. ஜானகி | குடத்தனை கிழக்கு |

**கைதடி வட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | சி. இரத்தினம் | கைதடி வடக்கு |
| 2-ம் இடம் | நா. சண்முகம் | மறவன்புலவு மத்தி |
| 3 ம் இடம் | இ. செல்லையா | கைதடி மேற்கு |

**சாவகச்சேரி வட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | சி சுப்பிரமணியம் | நுணாவில் சந்தி சாவகச்சேரி |
| 2-ம் இடம் | க. அன்னலட்சுமி | மருதடி மேற்கு டச்சுறோட் சாவகச்சேரி வடக்கு |
| 3-ம் இடம் | ச. சீதாதேவி | டச்சுறோட் மீசாலை மேற்கு |

**கொடிகாம வட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | க. தர்மஜெகதீஸ்வரி | கரம்பைக்குறிச்சி வரணி |
| 2-ம் இடம் | செ. வல்லிபுரம் | கெற்பலி. மிருசுவில் |
| 3-ம் இடம் | த. கந்தையா | கண்டிவீதி கொடிகாமம் |

**பளை வட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | சி. கனகசிங்கம் | முருகந்தநாதர் பளை |
| 2-ம் இடம் | கி. சசிதேவி | வேம்பொடுகேணி பளை |
| 3-ம் இடம் | மு. பொன்னுத்துரை | வேம்பொடுகேணி பளை |

**யாழ்ப்பாண வட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | வி. சிவனேசன் | 166 நாவலர் வீதி |
| 2-ம் இடம் | து. வில்லியம் ஜெயகுலராசா | 90 பழைய பூங்காவீதி சுண்டுகுழி |
| 3-ம் இடம் | தெ இந்திரமதி | 37 கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி |

**நல்லூர் வட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | நா. சிறிவிவேகானந்தன் | அரியாலை |
| 2-ம் இடம் | க. பஞ்சலிங்கம் | கொக்குவில் |
| 3-ம் இடம் | சி. ஆனந்தசுந்தரம் | அரியாலை |

**உடுவில் வட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | ம, சர்வேஸ்வரன் | யோகவா சம் சிவகாமி அம்மன் கோவிலடி |
| 2-ம் இடம் | சி. பாரதி | சுண்ணாகம்தெற்கு, சுண்ணாகம் |
| 3-ம் இடம் | செ. திலீபன் | பொலிஸ் நிலைய வீதி சுண்ணாகம் தெற்கு |

**சண்டிலிப்பாய் வட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | பொ. புஸ்பராணி | சுதுமலை வடக்கு, மானிப்பாய் |
| 2-ம் இடம் | சி. இராசலிங்கம் | கட்டுடை மானிப்பாய் |
| 3-ம் இடம் | நா, கணேஸ் | கனகசபை வீதி, மானிப்பாய் |

**சங்கானை வட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | அ. ஆனந்தராசா | கணேஸ் வீதி, சங்கானை |
| 2-ம் இடம் | ஜீ. பூமாதேவி | வல்லை வீதி, சங்கானை |
| 3-ம் இடம் | கு. பிரணவன் | பிரதான வீதி, மூளாய் |

**கோப்பாய் வட்டம்**

| | | |
|---|---|---|
| 1-ம் இடம் | சு. சிவரதி | சிறுப்பிட்டி மேற்கு |
| 2 ம் இடம் | ந. திருஞானசம்பந்தன் | நீர்வேலி வடக்கு |
| 3-ம் இடம் | வி. சகாதேவன் | அச்சுவேலி மேற்கு |

# அடுத்த தேர்தலில் ஐ. தே. கவிற்கு மரண அடி கொடுப்போம்

## சந்திரிகா குமாரணதுங்க கூறுகிறார்

(கொழும்பு)

தென்மாகாணசபை தேர்தலின் மூலம் கொடுக்கப்பட்டது ஒரு அடிமட்டுமே- எவ்வாறாயினும் அடுத்த தேர்தலின் பின்னர் ஒரு போதும் எழ முடியாதவாறு ஐக்கிய தேசியக் கட்சி தோற்கடிக்கப்படும் இவ்வாறு மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் திறந்த பொருளாதார கொள்கைக்கு நான் எதிரானவரல்ல- மக்களுக்கு நன்மைகளை வழங்கக் கூடிய எந்த

### சட்டவிரோத

மாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறு ஆயுதங்கள் தொடர்ந்து வெளியாரிடம் இருப்பது நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகமாக அமையும் எனச் சுட்டிக்காட்டிய பொலிஸ்மா அதிபர், இது தொடர்பான சகல தகவல்களையும் தனக்கு அறிவிக்குமாறு பிரதிப்பொலீஸ் மா அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாக 'லங்கா தீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

### பட்டதாரிகளுக்கு

நேர்முகப் பரீட்சைகள் அந்தந்த மாவட்ட செயலகங்களில் நடைபெறும் என்றும் அவர் சொன்னார். நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்களும் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுமெனக்கூறிய அவர் யாழ் மாவட்டத்திலிருந்து 500 பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் இவர்களுக்கான கடிதங்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மூலம் அனுப்பிவைக்கப் படுமெனவும் தெரிவித்தார்.

### இந்தியாவும்

இலக்குகளைத் தாக்கக் கூடிய இது ஐந்து முறை பரிசோதிக்கப்பட்டுள்ளது. இதனை இன்னும் இருவருடங்களில் பாதுகாப்பு துறையில் சேர்த்துக் கொள்ளத்திட்டமிடப்பட்டுள்ளது இதன் மூலம் பாகிஸ்தான் அமெரிக்காவிடம் கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ள எப்-16 ரக போர் விமானங்களை தாக்கலாம் எனவும் பாகிஸ்தானின் ஏவுகணைகளைத் தாக்கியழிக்க பயன்படுத்தப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

மேலும் குறுகியதூர தரை-ஆகாய ஏவுகணையான ''திரிசூல'' 500 மீற்றர் தொடக்கம் ஒன்பது கிலோ மீற்றர் வரையான தூரத்திலுள்ள இலக்கைத் தாக்கக்கூடியவாறு அமைக்கப்படஉள்ளது விரைவில் இது பாவனைக்கு வந்துவிடுமென இந்திய பாதுகாப்புத்துறையினர் கூறுகின்றனர்

பாகிஸ்தானிடமுள்ளகாலித் மற்றும் சீன உதவியுடன் பாகிஸ்தான் தயாரித்து வரும் எம். பி 2000 ரக டாங்கிகளைத் தாக்க இந்தியா ''நாக்'' எனும் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை உருவாக்கி வருகிறது. இது 4 கிலோமீற்றர் தூரம் பாய்ந்து சென்று டாங்கிகளை தாக்க வல்லது

''பிரிதிவி'' தவிர்ந்தஏனைய ஏவுகணைகள் பரிசோதனை நிலையிலேயே உள்ளதாக இந்தியதரப்பு கூறுகின்றது ''நம்மைச் சுற்றிலும் பாகிஸ்தான், ஈரான், சீனா என்று ஏவுகணைகளை வைத்துள்ள நாடுகள் உள்ளன. எனவே ஏவுகணைகள் எமது பாதுகாப்புக்கு முக்கியம்'' என விமானப்படைத் தலைமைத் தளபதி எஸ். கே. கவுல் கூறுகிறார்.

பொருளாதார கொள்கைகளையும் ஏற்றுக் கொள்வேன் ஆனால் இந்த நாட்டில் தற்போது இருப்பது ஒரு புதுமையான பொருளாதாரமாகும் அதனை நான் ஏற்றுக் கொள்ளவில்லை இது தலைவர்களுக்கு அப்பிள், திராட்சை தோட்டங்களை வாங்குவதற்கு அனைத்து கதவுகளையும் திறந்துவிட்ட ஒரு பொருளாதாரமாகும்.

விவசாயிகளுக்கு புறம்பான ஓர் இடம் வழங்கப்படும் உர மானியங்கள் துரிதப்படுத்தப்படும் இவ் அரசினால் வீணடிக்கப்படும் கோடிக்கணக்

### பரீட்சை

திறந்த பல்கலைக் கழகத்தில் உயர் கல்வி ஆங்கிலம் கற்கை நெறிக்காக விண்ணப்பித்தவர்கள் தங்கள் அனுமதிப் பத்திரத்தை பிராந்திய இயக்குநரிடம் நேரடியாக இன்று மாலை 1 00 மணி முதல் மாலை 4 00மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி கற்கை நெறிக்கான தரப்படுத்தல் பரீட்சை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் 15-05-94 ஞாயிறு காலை 10 00 மணி முதல் காலை 11 30 வரை நடைபெறும்.

பரீட்சை மண்டபத்திற்கு தேசிய அடையாள அட்டை அல்லது உறுதிப்படுத்திய அடையாள அட்டையுடன் சமுகம் கொடுத்தல் வேண்டும் என அறிவிக்கப்படுகிறது

### திருப்பு

தக்கைதுகள் நடக்கின்றன இந்த அகதிகளில் அதிகமானோர் கொழும்புப் பகுதிக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் எனவே இவர்களில் பலர் கைது செய்யப்படுவார்கள் அல்லது சிறிலங்கா அதிகாரிகளினால் இம்சைப்படுத்தப் படுவார்கள் என்று நாங்கள்

கருதுகிறோம் என்றார் பீற்றர் நிக்கலஸ்.

இலங்கையில் பாதுகாப்புப் படையினரிடம் அதிகாரம் இருக்கும்வரை எந்தத் தமிழ் அகதிகளும் இலங்கைக்குத் திரும்புவது பாதுகாப்பாக இருக்காது என்றார் அவர்.

இந்தக் கருத்தை லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் நிராகரித்துள்ளது. இலங்கைக்குத் திரும்புவது பாதுகாப்பாக இல்லாவிட்டால் அவர்களைத் திரும்பும் படி கேட்கப்பட்டிருக்க மாட்டாது என்று இலங்கைத் தூதரக அதிகாரி ஒருவர் கூறினார்.

### கல்குடா

பட்டதாகவும் பொது மக்களும், அலுவலகத்திற்குச் செல்பவர்கள் மீதும் கடும் சோதனை மேற்கொள்ளப்பட்டதோடு, தடுத்து வைக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன-

### அமைச்சரவை

க்கப்பட்டுள்ள தாகவும் இதனால் தனக்கு ஏற்படும் சகல ஆபத்துக்களுக்கும் ஜனாதிபதியே பெறுப்பேற்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

### சொத்தி

பினர்களின் பெயர்களை இவர் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுவதாகவும் பொலீசார் கூறுகின்றனர்-

இதேவேளை இவரின் குற்றச்செயலுக்கு உடந்தையாக செயல்பட்ட பல பொலிஸ் அதிகாரிகளின் நடவடிக்கைகள் போன்றவையும் வெளிவரும் என்றும் மேலும் தெரிய வருகின்றது.

கான தேசிய நிதியை மிச்சப்படுத்துவதன் மூலம் மற்றும் மோதல்களை இல்லாதொழிப்பதன் மூலமாக மேலும் பல நன்மைகளை செய்யக் கூடியதாக இருக்கும்.

ஐக்கிய தேசிய கட்சியில் ஐந்து பிரிவுகள் உள்ளன. என்னுடைய தம்பியும் புதிதாக ஒருபிரிவைஉருவாக்கிக்கொள்வதாக கேள்விப் படுகிறேன் அவர் சென்ற இடம் முடிவடைந்து விடும் எமது கட்சியில் இருக்கும் போது பிரிவுகளை உருவாக்குவதையே அவர் செய்து வந்தார்.

### அகதிகளை

மனித உரிமைகள் பற்றிய விவகாரங்களில் முனைப்பாக ஈடுபட்டு வருபவரும், தொழில் கட்சியின் முன்னாள் நிழல் வெளியுறவு அமைச்சருமான ஜெரால்ட் கொவ்மன் கூட்டத்தைஆரம்பித்துவைத்தார்.

இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் அடக்குமுறையை 1970 ஆம் ஆண்டுகளில் சிலி, ஆர்ஜன்ரீனா நாடுகளில் நடந்து வந்த அடக்கு முறையுடன் ஒப்பிட்டுப் பேசினார் ஜெரால்ட் கொவ்மன்.

கைதிகள், ஆட்கள் காணாமல் போவது இலங்கையில் சாதாரணமாகி விட்ட நிலையில் இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது எதிர்க்கப்பட வேண்டியது என்றார் அவர்.

இதே கருத்தை பிரிட்டிஷ் அகதிகளின் நலன்காக்கும் குழுவான பிரிட்டிஷ் ரிபியூஷி கவுன்சிலின் இயக்குநர் அல்ஸ்டக்ஸ் அவர்களும் எதிரொலித்தார்-

இந்தியாவில் மேலும் இலங்கைத் தமிழ் அகதிகளில் சிலர் தமது விருப்பத்துக்கு மாறாக இலங்கைக்குத் திரும்பும் படி நெருக்கடி கொடுக்கப்படலாம் என்ற கவலையை வெளியிட்டார் அவர்.

இலங்கைக்குத் திரும்பும் படி அகதிகளுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டு வருகிறதா, இல்லையா என்பது பற்றியும், அப்படிப்பட்ட நெருக்கடி கொடுக்கப்படுகிறதா என்பதை ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தால் கண்காணிக்கப்பட முடிகிறதா என்பது பற்றியும் சந்தேகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன நெருக்கடி மறைமுகமாகக் கொடுக்கப்பட்டு வரலாம் என்பது உங்களுக்குத் தெரியும் இலங்கைக்குப் போய்த்தான் ஆக வேண்டும் என்றவகையில் சூழ்நிலை உருவாக்கப்படலாம்- இந்த மறைமுக நெருக்கடிதான் எங்களுக்குக்கவலை தரும் விடயமாக இருக்கிறது- இப்போது இது நடக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால் சில சமயங்களில் இப்படிப்பட்ட நெருக்கடிகள் கொடுக்கப்பட்டு வந்தன என்ற கருத்து கடந்த சில ஆண்டுகளாக இருந்து வந்திருக்கிறது என்றார் அல்ஸ்டக்ஸ்-

இந்த அகதிகள் விடயம் பற்றிப் பேசுவதற்கு இந்தியத் தூதுவரைச் சந்திக்கத் தான் கேட்டதாகவும், தனதுவேண்டுகோள் மறுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்-

### 13 கைக்கூலி

றிவோல்வர் ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

சொத்தி உபாலி கட்டுகஸ்தோட்டயில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து வசித்து வருவதாக கிடைத்த தகவலை அடுத்து கட்டுகஸ்தோட்ட பொலிசார் அந்த வீட்டை முற்றுகை இட்டு தேடுதல் நடத்தினர்.

Nallur Branch Library


# விக்னா கல்வி நிறுவனம்

52 ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்

**96** நாளை

**கலை வர்த்தகம் புதியபிரிவு ஆரம்பம்:**

**14-05-1994** 8 மணி

- இன்றில்லை, நேற்றில்லை கடந்த 22 வருட காலமாக செய்ததை சொல்வோம்.
- கலை, வர்த்தக மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளே எமது உத்தரவாதம்.
- கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடைய கல்விக் குறிக்கோள்.
- பட்டம் பெற்ற ஆசிரியர்களின் பண்பான சேவை.

**பல பிரிவுகளுண்டு இதுவே இறுதிப் பிரிவாகும்.**

(சி-9405)



# DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE

**4 MONTHS**

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

**ஆரம்பம் 15 - 05 - 1994**

8. 30 மணி

Lectures By:

**S. P. SIVAPATHASUNDARAM**
**M. I. D. P. M** (London)

- முதல் அறிமுக வகுப்பு இலவசம்
- கட்டணம் தவணை முறையில் மாதம் ரூபா 400 |- மட்டுமே.
- BASIC கற்கும் மாணவர்களுக்கு Lotus Word Star பாடநெறிகளுக்கான கட்டணங்களில் சலுகை.
- அச்சடித்த பாடக் குறிப்பு.
- கூடிய செய்முறைப் பயிற்சிகள்.
- பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Pioneers in Computer Education)

16, 3rd, CROSS STREET, JAFFNA.

(சி-9401)



**யாழ் ஸ்ரீதரில்...**

தினசரி மாலை 3, 6 மணி

சனி, ஞாயிறு காலை 10. 30

மாலை 3, 6 மணி

**"காற்றுவெளி"**

இத்துடன் மார்ச் 94 "ஒளிவீச்சு"

காண்பிக்கப்படும்

**16-5-94 முதல் "மண்ணுக்காக"**

(சி-9370)



சாவகச்சேரி

**தெய்வேந்திரா வெண்திரையில்**

சிவாஜி, பத்மினி நடித்த

**"தில்லானா மோகனாம்பாள்"**

**நெல்லியடி மகாத்மா வெண்திரையில்**

எம். ஜி. ஆர். பானுமதி நடித்த

**"நாடோடிமன்னன்"**

தினசரி 6. 30 காட்சிகளாயும்,

சனி, ஞாயிறு தினங்களில்

10. 30, 2. 30, 6. 30 காட்சிகளாயும்

காண்பிக்கப்படுகின்றது: (கலர்)

(சி-9386)


# 'சுதந்திரப் பறவைகள்' நாளை வெளிவருகின்றது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வ ஏடான "சுதந்திரப்பறவைகள்" வைகாசி இதழ் சீதனக் கொடுமையை எதிர்த்து தமிழீழமெங்கும் பிரசார இயக்கம் எனும் தலைப்புச் செய்தியுடன் நாம் கடந்து வந்த பாதை, விடிவெள்ளி, சுதந்திரத்தைத் தேடி, சீதனமும் தேசவழமைச் சட்டமும் மற்றும் "நிமிர்வு" சிறுகதையுடன் பல கவிதைகளையும் தாங்கி நாளை வெளிவருகின்றது

# 'மண்ணுக்காக' திரைப்படம் திங்கள் வெளியாகிறது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய "மண்ணுக்காக" தமிழீழத்தின் முதல் முழுநீளதிரைச் சித்திரம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் யாழ் குடாநாட்டின் திரையரங்குகளில் காண்பிக்கப்படவிருக்கின்றது.

இத் திரைப்படத்தில் சந்தனக்காடு நாடகக் கலைஞர்கள் தேவர் அண்ணா, கணேஸ், பூரணா, பிரியா, அமரசிங்கம், மகேந்திரன், பாஸ்கரன், சீலன், பேனாட், சுருளி, வேந்தன், உதயன், இளங்கோ, டயஸ் இவர்களுடன் கலையரசன் சுகுமார், பெஞ்சமின், பாஸ்கரன் மழலைத் தாரகைகள் சி. சிவரஞ்சனி, சி. சிவநிரஞ்சனா, ஆன், விஜேந்தினி மற்றும்பலர் தோன்றி நடித்துள்ளார்கள்.

படத்தில் இடம்பெறும் இரண்டு பாடல்களையும் வீஜயன், மேனின் லேஜினி ஆகியோர் இணைந்து பாடியுள்ளார்கள்.

வளர்ந்து வரும் இளம் இசையமைப்பாளர் முரளி இப்படத்திற்கான இசையை அமைத்துள்ளார்.

வல்வையூரானின் மூலக் கதைக்கு படவடிவம் கொடுத்து உரையாடல்கள். பாடல்கள் என்பவற்றை எழுதியுள்ளதோடு, நெறியாள்கையினையும் மேற்கொண்டுள்ளார் பொன். கணேசமூர்த்தி.

இப்படத்திற்கான தயாரிப்பு நிர்வாகத்தினை கலை, பண்பாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த பாஸ்கரன் மற்றும் நாகேந்திரசீலன், வல்வையூரான் ஆகியோர் கூட்டாக மேற்கொண்டுள்ளனர்.

# மட்டக்களப்பில் புதிய அதிரடிப்படை முகாம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகள் சிறிலங்கா பொலிசாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது அப்பகுதியில் இருந்து அதிரடிப் படையினர் விலகுவதினால் இப்பகுதிகள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இதேசமயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல புதிய அதிரடிப்படை முகாம்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது படுவான்கரை செட்டிபாளையம், தாளங்குடா மண்முனை. ஆரையம்பதி, அம்பிலான்துறை. மகிழடித்தீவு, கிரான்குளம் ஆகிய பகுதிகளிலேயே இப்புதிய முகாம்கள் அமைக்கப்படவுள்ளன

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-05 13 - வெள்ளி இரவு

08-01 - கலை மஞ்சரி முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாகும் நூல்கள் "சில மனிதர்கள்" - கதைத் தொகுதி "பொழில்" - கவிதைத் தொகுதி அடுத்து சிறுகதை "விடுதலை" அதனையடுத்து கவிதைகள்
1 தானைத் தலைவன்
2. உலகக் குரவை

08-30 - செய்திகள்

08-40 - அரசியல் அரங்கம் - "கூரேயின் உடலுக்குள் கூடுவிட்டு கூடு பாயும் பிரேமாவின் ஆவி".

08.50 வாத்திய கானங்கள்

1994-05 14 - சனி காலை

07-02 - மாவீர வணக்கம்

07-15 - நீங்கள் கேட்டவை

07-30 - செய்திகள்

07-35 - பத்திரிகைச் செய்திகள்

07-45 - நீங்கள் கேட்டவையின் தொடர்ச்சி.

# கராத்தே போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் யாழ் மாவட்ட ரீதியில் நடாத்தப்படும் கராத்தே போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9 00மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டத்தின் சகல பிரபல பயிற்றுநர்களின் மாணவர்களும் இதில் பங்கு பற்றுகின்றார்கள்.


# மாவீரர் உருவப்படம்

மன்னார் மாவட்ட மாதிரிக் கிராமம் என்னும் இடத்தில் 06-01-92இல் ஏற்பட்ட வெடிவிபத்தின்போது வீரச்சாவடைந்த மன்னார் மாவட்டத்தளபதி லெப் கேணல் வேணு, மேஜர் சயந்தன், மேஜர் குகன், கப்டன் குட்டிமணி, 28-05-92 அன்று பூநகரி இராணுவ காவலரண் தகர்ப்பின்போது வீரச் சாவடைந்த மேஜர் அர்ச்சுன் (விவேகன்) ஆகியோரது உருவப்படங்கள் இன்று மாலை 5.00 மணியளவில் சுண்டிக்குழிச் சந்தியில் திரை நீக்கம் செய்யப்படவுள்ளது-


**சிறகடிக்கின்றது**

# சிட்டு

**அறிவாற்றல் ஏடு**



- கதைகள்
- கட்டுரைகள்
- தகவல்கள்
- சித்திர விளையாட்டுக்கள்
- நடைச் சித்திரங்கள்
- இன்னும் பல...

வழி- அறிவுலகப் பதிவேடு - இணைப்பு

பல வண்ணங்களில் உங்களுக்காக...

**ரூபா - 9-50**

(சி-3414)


பல்கலை. அனுமதிக்கு தகுதி பெற்றோர்

# ஆசிரிய நியமனத்திற்கு நாளை நேர்முகப் பரீட்சை

கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெற தகைமை பெற்றவர்களுக்குஆசிரியநியமனங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

மேற்படி தகைமையைப் பெற்று அரசாங்க பாடசாலைகளில் சகாய ஆசிரியராக நியமனம் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நேர்முகப் பரீட்சை வவுனியா கல்வித்திணைக்களத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ள இந்நியமனத்திற்கு 1992, 1993ஆம் ஆண்டுகளில் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியோர் விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி செல்லத்துரை

உசன் மிருசுவிலைச் சேர்ந்த சின்னத்தம்பி செல்லத்துரை அவர்கள் 09-05-94 அன்று கொழும்பில் காலமானார். இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும். செல்வறூபி, சுரேஜினி, ரமேஜினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், இராஜேந்திராவின் (U.K) அன்பு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் நேற்றையதினம் புஞ்சி பொறளை றோமன்ஸ் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் பொறளை கனத்தை மயானத்தில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தீ. முருகதாசன்

(8267)



திங்கள் முதல்... மண்ணுக்காக

(ஐ)